878

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

878.
450

★

## இந்த இதழில்

புதிய சென்னைச் சட்டங்கள்

வருமான வரி சட்ட திருத்தம்

விற்பனை வரி விதி திருத்தம்

இன்ஷ்யூரன்ஸ் விதிகள்

ஜீனி - வெல்லம்
கட்டுப்பாடு உத்தரவு

பருத்தி கட்டுப்பாடு உத்தரவு

கலப்பு எரு

வழக்கும் — தீர்ப்பும்

கேள்வி — பதில்

புதிய கண்ட்ரோல்
உத்தரவுகள்

★

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 DEC 1950
MADRAS



1704

"VAKIL" நவம்பர் 1950 4

"வக்கீல்" பிரசுரங்கள்—1

தமிழில்

# தொழிற்சாலைச் சட்டமும் - விதிகளும்

(சுருக்கம் - நமூனு 20-ன் படி எளிய தமிழில் எழுதப்பட்டது.)

தொழிற்சாலைகளில்
சட்டப்படி தொங்கவிட உபயோகமானது.
தொழிலாளர்களுக்கு எளிதில் விளங்கக்கூடியது.

## விலை அணு 8

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

கிடைக்குமிடம் :—

## மானேஜர்

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம் (தென் இந்தியா)

**V. S. சீல்** 107 நெ. ஓர்க் ஷாப் 106 நெ. ஷோ ரூம்

**கியாரண்டி**

V. சுந்திரேசய்யர்,
ஷராப்புக் கடை,
பெரியதெரு,
கும்பகோணம்.

எங்களிடம் கட்டி வெள்ளிக்கு உத்திரவாதமுள்ள வெள்ளி பாத்திரங்களும், தங்க நகைகளும் கிடைக்கும். அன்பர்கள் ஆதரவு கோரப்படுகிறது.

**CROSS LEAD FURNITURE CO.,**

கிராஸ் லீட் பர்னிசர் கம்பெனி,

**(Prop: Dr. KOSHY)**

| தலைமை ஆபீஸ் | கிளை ஆபீஸ் |
|---|---|
| டைமண்ட் சினிமா ரோட் கும்பகோணம் | விஜயபுரம் திருவாரூர் |

மரசாமான்கள் வேலைப்பாடாகச் செய்வதில் பிரசித்தி பெற்ற எங்கள் ஸ்தாபனத்தைத் தங்களுக்கு அறிமுகப் படுத்துகிறோம். எங்களிடம், வீடுகளுக்கும், பங்களாக்களுக்கும், ஆபீசுகளுக்கும், மிக உபயோகமுள்ள வேலைப் பாடு செய்யப்பட்ட மரசாமான்கள் விதம் விதமாய் ஏராள ஸ்டாக் இருக்கின்றது. கலியாணங்களுக்கு சீர் கொடுப்பதற்கான எங்கள் மரசாமான்கள் இணையற்றவை. ஆர்டர் பேரிலும் செய்து கொடுக்கிறோம். எங்கள் கம்பெனியின் சாமான்கள் மலிவாக இருப்பதுடன் அழகாகவும் உறுதியாகவும் உள்ளவை. தங்கள் ஆதரவையும் அன்பையும் கோருகிறோம்.

கிராஸ் லீட் பர்னிசர் கம்பெனி.

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்**

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். சந்தா முடிந்தவுடன் புதிதாய்ச் சந்தா அனுப்பும்போது பழய சந்தா நம்பரைக் கண்டு எழுதவும். சந்தா நம்பர், சந்தாதாரரின் தபால் விலாசத்திற்குமேல் கொடுக்கப்பட்டிருக்கும் எண்தான்.


"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.



ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
" V. தியாகராஜன், B. A., B. L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
" S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
" T. S. வெங்கடராமன், B. A., B. L.,
" R. கோபாலசாமி, B. A., B. L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
" P. சுந்தரேசய்யர், B. A. B. L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L. (ஆசிரியர்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 DEC 1950
MADRAS


## "வக்கீல்"

## (சந்தா விபரம்)

| | |
|---|---|
| வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு | ரூ. 3—0—0 |
| தனிப் பிரதி ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்


"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 நவம்பர் 1950 இதழ் 11


## பொருள் அடக்கம்


பக்கம்

குறிப்புகள் 3

புதிய சட்டங்கள்

சுருக்கியும்—வரிசையாகவும் 1950 ஆம் வருட சென்னைச்சட்டங்கள் 4

வரிகள்

வருமான வரிச்சட்டம் 6

விற்பனை வரி விதி 18-திருத்தம் 7

அயல் நாடுகளில் 7

வழக்கும்-தீர்ப்பும்

பேச்சு-எழுத்து சுதந்தரம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு 8

தொழில் சுதந்தரம்-சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு 9

பழைய ஆடைகளை மலிவாக தெருவில் வாங்கியவர் 10

பாகிஸ்தான் வழக்கு-ரம்ஸான் மாதத்தில் பகலில் உணவு அருந்தியவர்கள் 12

அடுத்து வரும் இதழ்களில் 14

கேள்வி-பதில் 15

இன்ஷ்யூரன்ஸ் சட்ட விதிகள் 18

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்

விலை நிர்ணயம்— இதர சர்க்கார் அறிக்கைகள். 20



## "வக்கீல்"

## விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

★ "வக்கீல்" பத்திரிகையில் செய்யும் விளம்பரம் தமிழ் மக்கள் வசிக்கும் இடமெங்கும் பரவும். ★

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—
தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ**
தெப்பக்குளம் P. O., திருச்சி.

---

## "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்தியேகம்

ஆயுர்வேத வைத்தியர்
**T. V. ஜெயராம சாஸ்திரிகள்,**
வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

---

## பிலிப்ஸ் ரேடியோ செட்

5 வால்வு எல்லா ஸ்டேஷன்களும் கேட்கக் கூடிய செட் விலை ரூ. 240/-

எலெக்டிரிக் பல்புகள்
இன்னும் பலவகை
எலெக்டிரிக் சாமான்களும்
கண்ட்ரோல் விலைக்கு கிடைக்கும்.

*Authorised Dealers:—*

**மாடர்ன் ரேடியோஸ்**
பெரிய தெரு :: கும்பகோணம்

---

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி

## "ஜெயராம்" காயசுத்தி லேகியம்



இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்
ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீர்ணம், வயிற்றுப்பிசம் வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால்வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிகட்டி சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4—0—0 ½ சேர் ரூ. 2—2—0

வி. பி. பி. செலவு தனி.

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்.

தயாரிக்குமிடம்:— **ஜெயராம் வைத்தியசாலை,**
28, காசிவிஸ்வநாதர் மேலவீதி, கும்பகோணம்.

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 நவம்பர் 1950 இதழ் 11

## குறிப்புகள்.

### தொழிற்சாலைச் சட்டமும்—விதிகளும் (சுருக்கம்)

பொது மக்களுக்கு உபயோகமுள்ள பலமுக்கிய சட்டங்களைத் தனித்தனிப் புத்தக வடிவமாக "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தலைப்பின் கீழ் பிரசுரம் செய்யப் போவதாக முந்திய இதழ் ஒன்றில் நேயர்களுக்குத் தெரிவித்திருந்தோம். அதற்கிணங்க இப்பொழுது "தொழிற்சாலைச் சட்டமும்—விதிகளும்— சுருக்கம்" என்ற புத்தகம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் உற்பத்திச் சாலைகள் யாவும் (ஹோட்டல்கள் உள்பட) இப்பொழுது "தொழிற்சாலை" கள் தான். தொழிற்சாலைச் சட்டப்படி அச்சட்டம் வீதிகள் இவைகளின் முக்கிய அம்சங்களை ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆங்கிலத்திலும், பிரதேச பாஷையிலும் யாவருக்கும் தெரியக் கூடிய இடத்தில் விளம்பரப் படுத்தி இருக்கவேண்டும். அச்சுருக்கம் தொழிற்சாலை விதிகளின் நமூனா 20-ன்படி இருக்க வேண்டுமென்றிருப்பதால் அதைத் தழுவியே எளிய தமிழில் இப்புத்தகம்பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. நோட்டீஸ் போர்டில் இந்த நமூனாவை ஒட்ட வேண்டுமானால் இப்புத்தகத்தில் இரண்டு பிரதிகளை வாங்கி தொழிற்சாலைகள் உபயோகித்தால் எல்லாப் பக்கங்களையும் ஒட்டி விடலாம். மேலும் இந்த நமூனா 20-ல் அடங்கிய விஷயங்களை தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் ஒவ்வொரு தொழிலாளரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றேதான் சர்க்கார் இவைகளைப் பிரசுரம் செய்ய ஒரு விதியை ஏற்படுத்தி இருப்பதால் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் உபயோகப்படும் விதம் மிகச் சுலபமான எளிய தமிழ் நடையில் இது எழுதப் பட்டிருக்கிறது. விலையும் அணா 8 தான். தபால் சார்ஜ் வேறு.

இனி மாதா மாதம் ஒரு முக்கிய சட்டம் புத்தக ரூபமாக வெளிவருவதை நேயர்கள் எதிர்பார்க்கலாம்.

**கேள்வி — பதில்:** "வக்கீல்" தன்னுடைய "கேள்வி — பதில்" பகுதி மூலம் நேயர்களுக்குச் செய்து வரும்பணியினால் பெருமையடைந்தாலும், கேள்வி கேட்கும் அன்பர் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய விருப்பப்படி உடனேயே பத்திரிகை மூலமோ, நேரிலோ பதில் தெரிவிக்க முடியவில்லையே என்ற வருத்தமும் வக்கீலுக்கு உண்டு. ஆனால் ஒவ்வொரு நேயருடைய கேள்விக்கும் வரிசை கிரமமாய்ப் பதில் கொடுத்து வருவதாலுண்டாகும் கால தாமதத்தை ஒரு பெரிய தவறாக எண்ணாமல் நேயர்கள் மன்னித்து விடுவார்கள் என்ற தைரியமும் "வக்கீலுக்கு" உண்டு. இனி கேள்விகளுக்கு உடனேயே பதில் கிடைக்கும் விதம் செய்ய சில புது நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை என்ன என்று நேயர்கள் "கேள்வி—பதில்" பகுதியில் படித்துக்கொள்ளலாம். இனி இந்த நிபந்தனைகளை அனுசரித்தே கேள்வித் தாள்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

187700

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1950-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னை-சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டில் கொடுக்கப் பட்டிருக்கும் தேதி அச்சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டன.]

### 13 ஆவது (சென்னை) சட்டம்

வேடிக்கைகளுக்கு வரி விதிக்கும் சட்டம் (Madras Entertainments Tax Act-1949) திருத்தப் பட்டிருக்கிறது. புதிதாகப் போடப் பட்ட சினிமாக் காட்சி வரி, சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து நான்கு வருடங்கள் வரை, அதாவது 1-8-1953 வரை, வசூலிக்கப்படும் என்று திருத்தப் பட்டிருக்கிறது.

### 14 ஆவது (சென்னை) சட்டம்

(19-9-1950) சென்னை எதிர் பாராச் செலவு நிதிச் சட்டம் (Madras Contingency Fund Act-1950.) இச்சட்டத்தால் சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒரு தனிக் கணக்கில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. எதிர்பாராத அவசரச் செலவுகள் மட்டில் இந்த நிதியிலிருந்து சென்னைச் சர்க்காரால் செலவு செய்யப்படும். செலவு செய்யப்பட்ட பிறகு சட்ட சபைகள் அச்செலவுகளை அங்கீகாரம் செய்தவுடன் மறுபடியும் அதே தொகை பொது நிதியிலிருந்து இத்தனிக் கணக்குக்கு மாற்றப் படும்.

### 15 ஆவது (சென்னை) சட்டம்

(19-9-1950) சென்னை ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டம் (Madras Buildings—Lease and Rent control Act) 30-9-1950 தேதியுடன் அமுல் இழந்து போகும்படி இருந்தது. இத்திருத்தச் சட்டத்தால் மேற்படி சட்டம் 30-9-1951 முடிய அமுலில் இருக்கும் படி நீடிக்கப் பட்டிருக்கிறது,

### 16 ஆவது (சென்னை) சட்டம்

(26-9-1950) 1930 ஆம் வருடத்திய அபாய மருந்துச் சட்டம் (Dangerous Drugs Act-1930) திருத்தப் பட்டிருக்கிறது. இத் திருத்தப்படி மதுவிலக்கு இலாகா (Prohibition) அதிகாரிகளுக்கும் இச்சட்டத்தை அமுல் நடத்தும் சில அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன.

### 17 ஆவது (சென்னை) சட்டம்

(26-9-1950) இச்சட்டப்படி, முன்பு புதுக்கோட்டை சமஸ்தானத்தின் சீப் கோர்ட்டில் (ஆயுள் வரை) வக்கீல்களாகப் பதிவு செய்து கொண்டிருந்தவர்கள், இப்பொழுது பிளீடர்களாகத் தொழில் புரிய மறுபடியும் சென்னை சட்டப்படி ஸ்டாம்பு கட்டவேண்டியதில்லை என்று அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### 18 ஆவது (சென்னை) சட்டம்

(28-9-1950) சென்னை அத்தியாவசியப் பொருள் கட்டுப்பாடு சட்டம் (Madras Essential Articles control and Requisitioning—Temporary Powers-Act 1949) 30-9-1950 தேதியுடன் அமுல் இழந்து போகும்படி இருந்தது. இத்திருத்தச் சட்டத்தால் அச்சட்டம் 30-9-1951 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது. மேலும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்திற் கிணங்க இச்சட்டத்தில் வேறு சில திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது இச்சட்டத்தின்படி சில பண்டங்களின் உற்பத்தி விநியோகம் இவைகளை ஒழுங்கு படுத்துவதற்காக எந்தப் பிரஜையிடமிருக்கும் ஜங்கம சொத்தையும், ஸ்தாவர சொத்தையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம் என்றும் அப்படி எடுத்துக் கொள்ளப்படும் ஜங்கம சொத்துக்களுக்கு சொத்தின் சொந்தக்காரருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதைப் பற்றிப் பின்பு விதிகள் செய்யப் படுமென்றும்; ஸ்தாவர சொத்துக்கள் எடுத்துக் கொள்ளப் பட்டால் அதற்காக நஷ்ட ஈடு

நிர்ணயம் செய்ய ஜில்லா ஜட்ஜ் அல்லது சப் ஜட்ஜ் மத்தியஸ்தராகச் சர்க்காரால் நியமிக்கப் படுவார் என்று மட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. புதிய அரசியல் அமைப்புச் சட்டப்படி இவ்விதம் நஷ்ட ஈடு எவ்வளவு என்று குறிப்பிடாமல் மக்களின் சொத்தை மட்டில் சர்க்கார் எடுத்துக் கொள்ள அனுமதிக்கும் சட்டம் ஒன்றும் செல்லாது. ஆகையால் இச்சட்டம் இப்பொழுது திருத்தப் பட்டிருக்கிறது. இத்திருத்தப்படி பொதுமக்களின் ஸ்தாவர சொத்து அல்லது ஜங்கம சொத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டால் அதற்குள்ள சரியான காலக் கிரயமே நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், காலக்கிரயம் (Market-Value) எவ்வளவு என்று சொத்துக்காரர் ஒப்புக்கொள்ளாவிட்டால் ஜில்லா அல்லது சப் ஜட்ஜ் இதை மத்தியஸ்தராக நிர்ணயிக்க வேண்டு மென்றும் சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது.

19 ஆவது (சென்னை) சட்டம் (3-10-1950) (Madras Weights and Measures Amendment Act 1950) சென்னை ராஜ்யத்தில் எங்கும் வழங்கக் கூடிய படிக்கல், தராசு, படி முதலிய எடை அளவைகளை ஒழுங்கு செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் "எடை அளவை ஒழுங்குச் சட்டம்" என்ற 1948 ஆம் வருடத்திய 22 ஆவது (சென்னை) சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது. அதாவது அச்சட்டத்தில் "வராகனெடை" (Pagoda) என்ற எடை அங்கீகரிக்கப் படவில்லை. இத்திருத்தச் சட்டத்தால் எடை அளவைச் சட்டம் எந்தத் தேதியில் அமுலுக்குக் கொண்டு வரப்படப் போகின்றதோ, அத் தேதியிலிருந்து இரண்டு வருடங்கள் மட்டில் "வராகனெடை" (54 - 79 ஸ்டாண்டர்ட் கிரெயினுக்குச் சமமானது) என்ற எடையை, தங்கம், அல்லது வெள்ளி சம்பந்தமான வியாபாரம் முதலியவற்றில் உபயோகிப்பதும், அந்த "வராகனெடை" என்ற எடையை வைத்திருப்பதும் குற்றமாகாது—என்று ஒரு ஷரத்து அச்சட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

[குறிப்பு:— எடை அளவை ஒழுங்குச் சட்டம் 25-1-1949-ல் சட்டமாகி இருந்தாலும் இன்னும் அச்சட்டத்தைச் சென்னைச் சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. இச்சட்டம் விபரமாய் 1949 "வக்கீல்" ஏப்ரல் இதழில் விளக்கப் பட்டிருக்கிறது.]

20 ஆவது (சென்னை) சட்டம் (3-10-1950) (Madras Legislature, Prohibition of Simultaneous Membership Act 1950.) சென்னை - கீழ்ச்சட்ட சபை, மேல் சட்ட சபை இரண்டுக்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டால், ஏதாவது ஒரு சபையில் மட்டில் தான் அவர் பதவி வகிக்க முடியும் என்று நிர்ணயம் செய்யும் சட்டம்.

21 ஆவது (சென்னை) சட்டம் (3-10-1950) Madras City Municipal Amendment—Act 1950). சென்னை முனிசிபல் சட்டப்படி ஒவ்வொரு டிராம்காருக்கும் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்க வேண்டியதாக விதிக்கக் கூடிய வரி ரூ. 100 ஆக இருந்தது ரூ. 900 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது.

22 ஆவது (சென்னை) சட்டம் (17-10-1950) சென்னை கூட்டுறவு நில அடமான பாங்குச் சட்டத்திருத்தம். (Madras Co-operative Land Mortgage Banks-Second Amendment Act 1950). இத்திருத்தச் சட்டப்படி செக்ஷன் 32B என்று அச்சட்டத்தில் ஒரு புதிய செக்ஷன் சேர்க்கப் பட்டிருக்கிறது. இப்புது செக்ஷன்படி நில அடமான பாங்குகளும், மத்திய பாங்குகளும் அவர்களுக்கு எழுதி கொடுக்கப்பட்டு அவர்கள் வசமுள்ள எந்த தஸ்த வேஜுகளுக்கும் அதிலுள்ள வரவு முதலியவைகளுக்கும் நகல் (காபி) கொடுக்கலாம். இதற்காக ஏற்படுத்தப்படும் விதிகளை அனுசரித்து கொடுக்கப்படும் 'சர்டிபைட் காபிகளை' அசல் தஸ்த வேஜுகளைப் போலவே எந்த கோர்ட்டுகளிலும் தாகல் செய்யலாம்.

# வரிகள்

## வருமான வரிச் சட்டம்:—

வருமான வரிச்சட்டத்தைப் (Income Tax Act) பற்றிய ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட்டால் 26–5–1950-ல் ஒரு முக்கியமான தீர்ப்பு அளிக்கப்பட்டது. (1950 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் — சுப்ரீம் கோர்ட் — பக்கம் 165) வருமானவரி விதிப்பதற்காக ஒருவருடைய வருமானம் எவ்வளவு என்று கணக்குச் செய்வதில் அவருக்குச் சொந்தமான வீடு கட்டடம் போன்ற சொத்துக்களிலிருந்து உண்மையில் ஒரு வருடத்தில் கிடைக்கக் கூடிய வாடகைத் தொகையும் (bonafide annual value) 'வருமான'மாகச் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால் 'வருட வாடகை மதிப்பில்' சிற்சில தொகைகளைக் குறைத்துக் கொள்ளலாமென்று இன்கம்டாக்ஸ் சட்டம் செக்ஷன் 9-ல் இருக்கின்றது. அதாவது அச்சொத்தின் ஜாமீன் ஜவாப்தாரியின்மீது அடமானம் போன்ற தொகைகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் (Capital Charge) அத்தொகைக்குக் கொடுக்க வேண்டிய வட்டியை வருட வாடகை மதிப்பில் கழித்துக் கொள்ளலாம். மேலும் அச்சொத்தின் ஜாமீன் ஜவாப்தாரியின்மீது வருடா வருடம் ஏதாவது தொகைகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தாலும் (annual charge), இத்தொகையையும் வாடகை மதிப்பில் கழித்துக் கொள்ளலாமென்று இருக்கிறது. இதில் ஒரு சொத்துக்கு முனிசிபாலிடிக்குக் கொடுக்க வேண்டிய முனிசிபல் வரிகள் சேர்ந்ததா? அவ்வரிகளுக்கு முனிசிபல் சட்டத்தால் சொத்து ஜாமீனாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் வாடகை மதிப்பில் முனிசிபல் வரியைக் கழித்துக்கொள்ளலாமா என்ற பிரச்னை ஒரு பம்பாய் வழக்கில் ஏற்பட்டது. இன்கம்டாக்ஸ் அபெலட் டிருபுனலும், பம்பாய் ஹைகோர்ட்டும் முனிசிபல் வரிகளைக் கழித்துக் கொள்ளக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டனர். அதன் மீது ஏற்பட்ட சுப்ரீம் கோர்ட் அப்பீலில், இன்கம்டாக்ஸ் சட்டத்தின் வாசகப்படி, முனிசிபல் வரிகளை வாடகை மதிப்பில் கழித்துக் கொள்ள வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு தீர்ப்பளித்தனர்.

ஆனால் இதுவரை இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் முனிசிபல் வரி முதலியவைகளைக் கழித்துக் கொள்வதில்லை. இத் தீர்ப்பினால் ஏற்பட்ட மாறுதலைப் போக்க இப்பொழுது மத்திய சர்க்கார் ஒரு அவசரச் சட்டத்தின் (Ordinance) மூலம் வருமான வரிச் சட்டம் 9 ஆவது செக்ஷனின் வாசகத்தை மாற்றி இருக்கின்றனர். இந்த 1950 ஆம் வருடத்திய 28 ஆவது அவசரச் சட்டம் 7–10–1950-ல் ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த அவசரச் சட்டப்படி "வருடா வருடம் சொத்தின் ஜவாப்தாரியின் மீது கொடுக்கப்பட வேண்டிய தொகை (annual charge) என்பதில் அச்சொத்துக்காகக் கொடுக்கப்பட வேண்டிய எவ்வித வரியும் சேராது; இப்படித்தான் எப்பொழுதும் அர்த்தம்" என்று சட்டத்தின் வாசகமே திருத்தப்பட்டுள்ளது.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு 26—5—1950-ல் ஏற்பட்டது. அதற்குப் பிறகு இந்த அவசரச் சட்டம் அமுலுக்கு வந்த 7—10—1950-க்கு முன் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் ஆதாரத்தின் மேல் எவருக்காவது வரிகளைக் கழித்துக்கொண்டு வருமானம் கணக்கு செய்யப்பட்டிருந்தாலும், மறுபடி வரிகளை கழித்துக் கொள்ளாமல் கணக்குச் செய்து, அவர்களுக்கு வரி போட, இன்கம்டாக்ஸ் அதிகாரிகளுக்கு இந்த அவசரச் சட்டம், அதிகாரம் கொடுக்கிறது.

ஆகையால் பழைய சட்டத்தை அர்த்தம் செய்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால், அங்கே வழக்காடி ஜெயித்தவரைத் தவிர, மற்றவர்களுக்கு லாபமில்லை. ஒருவருடைய வருமானத்தில் முனிசிபல் வரி முதலிய வரிகள் குறைத்துக் கொள்ளப்படமாட்டாது.

[குறிப்பு:—ஆனால் அடுத்த வருடம் முதல் வரித்தொகைகளின் ஒரு பாகத்தையாவது வருமானத்தில் கழித்துக் கொள்ளும்படி சட்டத்தை திருத்தப் போவதாக மத்திய சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.]

## விற்பனை வரிவிதி 18—திருத்தம்

விற்பனை வரிச் சட்டத்தை அனுசரித்து செய்யப்பட்டிருக்கும் 1939 ஆம் வருடத்திய விற்பனை வரி விதிகளில் (The Madras General Sales Tax Rules 1939) விதி 18ல் ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. விதி 18 என்பது:—விற்பனை வரி அதிகாரிகள் அதாவது வரி விதிக்கும் எ. சி. டி. ஓ. அல்லது டி. சி. டி. ஓ. அப்பீல் அதிகாரி (சி. டி. ஓ.), பரிசீலனை (Revision) செய்யக் கூடிய ரிவன்யூபோர்ட் முதலிய அதிகாரிகள் இவர்கள் அவரவர் செய்யும் உத்தரவுகளில், வெளிப் படையாகப் புலப்படும் தவறுகள் ஏதாவது ஏற்பட்டுவிட்டால் உத்தரவுத்தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் அவ்வுத்தரவை திருத்தலாம். (அதாவது ரிகார்டுகளைப் பார்ப்பதிலிருந்தே தம்முடைய உத்தரவு தவறு என்று ஏற்படும் தவறுகளைமட்டில் தான் இப்படித் திருத்தலாம்.) ஆனால் இவ்விதம் செய்வதில் ஒரு வியாபாரிக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் வரி அதிகமாக்கப்பட்டால் 'வரி விதிக்கும் அதிகாரி' அந்த வியாபாரிக்கு நோட்டீஸ் கொடுத்து, அவர் ஆட்சேபனைகளைச் சொல்லிக் கொள்ள சந்தர்ப்பமளித்து, பிறகுதான் 'வரி விதிக்கும் அதிகாரி' (assessing authority) வரியை உயர்த்த வேண்டுமென்று இருந்தது. இந்த வாசகத்தில் ஒரு இடுக்கு இருந்தது. அதாவது வரி விதிக்கும் அதிகாரி என்பது எ. சி. டி. ஓ. அல்லது டி. சி. டி. ஓ. தான். இவர்கள் மட்டில் இவ்விதம் தங்கள் உத்தரவுகளை இரண்டு வருடங்களுக்குள் திருத்தும்போது ஒரு வியாபாரியின் வரியை உயர்த்தினால் அந்த வியாபாரிக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றும், மற்ற உயர் அதிகாரிகள், அதாவது சி. டி. ஓ. ரிவன்யூபோர்ட்டு இவர்கள் தங்கள் உத்தரவைத் திருத்துவதால் ஒரு வியாபாரிக்கு ஏற்கனவே போட்ட வரியை அதிகப்படுத்தினால்கூட அந்த வியாபாரிக்கு யாதொரு நோட்டீசும் இல்லாமலே அவ்விதம் செய்யக்கூடும் என்பதுபோல் இருந்தது. இந்த வாசகம் இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. இனி இந்த 18 ஆவது விதியின்படி வரியை உயர்த்த வேண்டுமானால் சி. டி. ஓ. வும் ரிவன்யூ போர்டு முதலிய ரிவிஷன் அதிகாரிகளும் கூட வியாபாரிக்கு நோட்டீஸ் அனுப்பி, அவருடைய ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ள சந்தர்ப்பமளித்த பிறகுதான் அவ்வியாபாரியின் வரியை உயர்த்தமுடியும்—என்று 18 ஆவது விதியின் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

(19-9-1950 - சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I-ரூல் சப்ளிமெண்டு—பக்கம் 378).




### அமெரிக்காவில் விவாக ரத்து

நமது நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு "விவாக ரத்து" என்பதே ஒரு புதிய சொல். ஆனால் அமெரிக்கர்களுக்கு அப்படி அல்ல. எந்த எந்தக் காரணங்களினால் அமெரிக்க தம்பதிகள் தங்கள் விவாகத்தைக் கோர்ட் மூலம் ரத்து செய்துகொண்டனர் என்று சில வழக்குகளைக் கவனித்தால் "விவாக ரத்து" என்பது அமெரிக்காவில் ஜலம் பட்டபாடென்று தெரிய வரும்.

***

கிரேஸ்ஷிப்லெட் என்ற அமெரிக்க யுவதி தன் குழந்தைக்குப் பால் போட்டும் சமயங்களில் அவளுடைய கணவன் அதைப்பரிகாசம் பண்ணும் பாவனையில் 'கூ-கூ' என்று வேடிக்கைக்காகச் சொல்வது தனக்குப் பொறுக்க முடியவில்லை என்று காரணம் காட்டி விவாகரத்துக்கேட்டாள். உயர் நீதிபதி ஆல்ப்ரெட் பார்ட்லெட் "விவாக ரத்து" செய்ய உத்தரவிட்டார்.

***

மேரி ஆண்டர்ஸன் என்ற 33 வயதுள்ள அமெரிக்க ஸ்திரீ தன் கணவன் அவனுடைய தாயார் நோய்வாய்ப்பட்டு இருந்தவளைப் பார்த்து வரப்போனவர் சிலமாதங்கள் தாயின் அருகில் இருந்துவிட்டான். திரும்பி வரவில்லை. இக் 'குரூரமான' நடத்தையைப் பொறுக்க முடியாத மேரி "விவாகரத்து" கோரினாள். நீதிபதி ஜூலியஸ் இதை அனுமதித்தார்.

***

மிஸ்ஸஸ் ரூபின் என்ற 32 வயதுள்ள அமெரிக்க மாது "விவாகரத்து" க்குக் கோர்ட்டில் மனுச் செய்தாள். காரணம்:-இரண்டு வருடங்களாகத் தன் கணவன் தன்னை முத்தமிட மறுத்ததாகவும், அப்படிச் செய்வது தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதி என்றும் அவர் சொன்னதும் தான். இவள் விவாகரத்து அடைந்தாள்.

***

மேரிடன் என் விவாகரத்து செய்து கொண்டாள் தெரியுமா? தன் புருடன் தினம் 15 அல்லது 20 கோப்பை காபி கொடுக்கப் பட்டாலொழியச் சமயலறையை விட்டு வெளியேறுவதில்லையாம்.




இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## பேச்சு-எழுத்து-சுதந்தரம் ஒரு பம்பாய் பத்திரிகையைச் சென்னை ராஜ்யத்திற்குள் வரக்கூடாதென்று தடுத்த சென்னை சர்க்கார் உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

**கோர்ட்:** சுப்ரீம் கோர்ட்

**நீதிபதிகள்:** பிரதமநீதிபதி கனியா; நீதிபதிகள் பசுலாலி, நீதிபதி பதஞ்சலிசாஸ்திரி, நீதிபதிமஹாஜன்; நீதிபதி முகர்ஜி, நீதிபதி தாஸ் அவர்கள்.

**ஆதாரம்:**—1950 (2) மதராஸ் லா ஜர்னல் 390.

நாம் வசிப்பது ஒரு சுதந்தரக் குடியரசு என்பதை நமக்கு ஞாபகமூட்டி வரும் உயர் நீதி மன்றங்களின் சமீபகால தீர்ப்புக்களில் இதுவும் ஒன்று. இந்தியாவின் மக்களாகிய நமக்குச் சில ஜீவாதார உரிமைகள் உண்டென்று நமது அரசியல் அமைப்புச்சட்டத்தில் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த முக்கிய உரிமைகளை எந்தச்சர்க்காரும், எந்தச்சட்ட சபையும், எந்த அதிகாரியும் பறிக்கவும் முடியாது; குறைக்கவும் முடியாது. அப்படி நமது ஜீவாதார உரிமை யாரால் பாதிக்கப்பட்டாலும் நாம் நமது மாபெரும் நீதிமன்றமாகிய சுப்ரீம் கோர்ட்டுக்கே நேரடியாகச் சென்று பரிகாரம் தேடிக் கொள்ள முடியும். நமது ஜீவாதார உரிமைகள் வெறும் ஏட்டளவில் மட்டிலல்ல, நடைமுறையிலும் இவை நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன வென்பதை இவ்வழக்கும் இதில் ஏற்பட்ட தீர்ப்பும் எடுத்துக்காட்டுகின்றன.

ஜீவாதார உரிமைகளில் ஒன்று "பேச்சு-எழுத்து-சுதந்தரம்" அதாவது இந்தியப் பிரஜை எவரும் எந்த விஷயங்களிலும் தமக்குள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்தலாம்; எடுத்துரைக்கலாம். பரவச்செய்யலாம். இதை ஒருவரும் தடை செய்யமுடியாது. ஆனால் குறிப்பிட்ட சில விஷயங்களில் மட்டில் இந்த, "பேச்சு எழுத்து" சுதந்திரத்தை ஒரு கட்டுக்குள் கொண்டுவந்தோ வேறு வகையில் பாதித்தோ சட்டங்கள் செய்யப்படலாம். அதாவது (1) தூஷணை (2) அவதூறு (3) மானக்கேடு விளைவித்தல் (4) கோர்ட்டை அவமதிப்பது (5) ஆபாசம் அல்லது அசிங்கமான விஷயங்கள் (6) தேசத்தின் பாதுகாப்பை பாதிக்கும் அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்கும் விஷயங்கள் இவை சம்பந்தமாய்ச் செய்யப்படும் சட்டங்கள் மட்டில் பேச்சு எழுத்து சுதந்தரத்தை ஒருவிதத்தில் பாதித்தாலும், பொது நன்மையை உத்தேசித்து இவை அரசியல் அமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விஷயங்கள் தவிர வேறு காரணங்களினால் இச்சுதந்தரத்தைப் பாதித்துச் சட்டம் செய்ய முடியாது. இதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருப்பது.

பம்பாயில் பிரசுரமாகும் "கிராஸ் ரோடு" என்ற ஒரு ஆங்கில வாரப் பத்திரிகை சென்னை ராஜ்யத்திற்குள் எங்கும் வரக் கூடாதென்றும் 1 — 3 — 1950ல்

சென்னை சர்க்கார் அப்பத்திரிகையின் மீது ஒரு தடை உத்தரவு போட்டனர். இது தம்முடைய பேச்சு எழுத்து சுதந்தரத்தைத் தடை செய்கிறதென்றும் தம்முடைய பத்திரிகையை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் பரவச் செய்யத் தமக்கு இருக்கும் ஜீவாதார உரிமையைச் சென்னை சர்க்கார் உத்தரவு பறிக்கிறதென்றும் அதை ரத்து செய்யக் கோரி அப்பத்திரிகையின் உரிமையாளர் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுச் செய்தார்.

சென்னை சர்க்கார் இவ்வித உத்தரவு செய்ய அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கும் சட்டம் சென்னை 1949 ஆம் வருடத்திய பொது அமைதிப் பராமரிப்புச் சட்டம் (Madras Maintenance of Public Order Act 1949) என்பது. இச் சென்னைச் சட்டத்தின் ஒரு ஷரத்து "பொது அமைதியைக் காப்பற்றவும் பொதுப்பந்தோபஸ்தை உத்தேசித்தும்" எந்தப்பத்திரிகையும் சென்னை ராஜ்யத்திற்குள் வராமல் தடை செய்ய சென்னைச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கின்றது. இவ்விதம் சட்டம் செய்ய சென்னைச்சட்ட சபைக்கு அதிகாரமுண்டா என்ற பிரச்னை இவ்வழக்கில் ஏற்பட்டது. பேச்சு எழுத்து சுதந்தரத்தைப் பாதித்துச் சில விஷயங்கள் சம்பந்தமாய்த்தான் சட்டம் செய்யலாமென்று அரசியல் அமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப் படுவதால் "பொது அமைதி - பந்தோபஸ்து" என்பது அனுமதிக்கப் பட்ட அச்சில விஷயங்களில் ஒன்றா என்று நீதிபதிகளால் பரிசிலனை செய்யப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேசத்திற்கே யுத்தம், கலகம், போன்ற பேராபத்துகள் விளைவிக்காமல் பார்த்துக் கொள்ள மட்டில்தான் பேச்சு எழுத்து சுதந்தரத்தைப் பாதித்துச் சட்டம் செய்ய முடியுமென்றும், வெறும் பொது அமைதி அல்லது பந்தோபஸ்துக்காக, இந்த உரிமையை எடுக்கும் சட்டம் செல்லாதென்றும், இவ்விதசட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்தால் அனுமதிக்கப் படவில்லை என்றும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். பேச்சு எழுத்து சுதந்தரம் என்பதில் இவைகளை எங்கும் பரப்பும் (Circulation) உரிமையும் அடங்கியதேயென்றும் இதைத்தடுக்கும் சட்டம் செல்லாதென்றும், செல்லாத சட்டத்தின் கீழ் செய்யப் பட்ட சென்னைச்சர்க்காரின் உத்தரவும் செல்லாதென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டுச் சென்னை சர்க்கார் உத்தரவை ரத்து செய்தனர்.

## தொழில் சுதந்தரம்-நேரடியாக சுப்ரீம் கோர்ட் போய் தமது தொழில் சுதந்தரத்தை ஸ்தாபித்த கறிகாய் வியாபாரி

**கோர்ட்:** இந்திய சுப்ரீம் கோர்ட்.

**நீதிபதிகள்:** பிரதம நீதிபதி கனம் கனியா; நீதிபதிகள் கனம் பசல்ஆலி; கனம் பதஞ்சலி சாஸ்திரி; கனம் மகாஜன்; கனம் முகர்ஜி அவர்கள்.

**ஆதாரம்:** 63 லா வீக்லி 867.

முன் ஐக்கிய மாகாணம் என்று வழங்கிய உத்தரப் பிரதேசத்தில் கைரானா என்ற ஒரு முனிசிபாலிட்டி இருக்கின்றது. அங்கே ரஷீது அகமது என்ற ஒருவர் சென்ற இரண்டு மூன்று வருடங்களாகக் கறிகாய் வியாபாரம் செய்து வருகிறார். அவர் செய்து வருவது மொத்த வியாபாரம். ஒரு இடத்தில் ஒரு வாடகைக் கடையைப் பிடித்து அதில் தம் வியாபாரத்தை நடத்தி வந்தார்.

அந்த முனிசிபாலிட்டி எல்லைக்குள் காய்கறிகள் விற்பனை செய்வதை ஒழுங்குபடுத்தும் விதிகள் (Bye-laws) ஒன்றும் முனிசிபாலிட்டியாரால் ஏற்படுத்தப்படாமலே இருந்தது.

ஆனால் 1949 மார்ச்சு மாதத்தில் அம் முனிசிபாலிட்டியார் இது சம்பந்தமான ஒரு தீர்மானமும் விதியும் செய்தார்கள். அது சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு, 1-1-1950 முதல் அமுலுக்கு வந்தது. இவ் விதியில் அம் முனிசிபாலிட்டியில் குறிப்பிட்ட இடத்தில்தான் காய்கறிகளின் மொத்த வியாபாரம் நடத்தப்பட வேண்டுமென்றும், முனிசிபாலிட்டியாரின் அனுமதியின்றி எவரும் இந்த வியாபாரம் செய்யக் கூடாதென்றும் தடுக்கப்பட்டிருந்தது. இத்துடன் முனிசிபாலிட்டியார் நிற்கவில்லை. புதிதாக ஏற்படுத்தப்பட்ட மார்க்கெட்டில் காய்கறி

மொத்த வியாபாரம் செய்யும் பாத்தியத்தை மூன்று வருடங்களுக்கு ஏலத்தில் விட்டு அதில் அதிகத் தொகைக்கு ஏலம் கேட்ட ஹபீபு என்பவருக்கு இந்தப் பாத்தியம் கொடுக்கப் பட்டது.

இது இப்படி இருக்க முன் சொல்லப்பட்ட ரஷீது அகமது என்பவர் தாம் இரண்டு மூன்று வருடங்களாக மொத்த வியாபாரம் செய்து கொண்டு வரும் இடத்திலேயே தம் வியாபாரத்தை நடத்த தமக்கு லைசென்சு வேண்டுமென்று முனிசிபாலிட்டிக்கு மனுப் போட்டார். இதை முனிசிபாலிட்டியார் நிராகரித்தனர். ஏனென்றால் இவ்விதம் லைசென்சு வாங்கிக் கொள்ள முனுசிபாலிட்டியால் யாதொரு விதியும் ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். மேலும் 1-1-1950க்கு பிறகும் ரஷீது தம் மொத்த வியாபாரத்தை முனிசிபாலிட்டியாரால் குறிப்பிடப்பட்ட இடமல்லாத வேறு இடத்தில் நடத்தியது குற்றமென்றும் அவர் மீது முனிசிபாலிட்டியார் கிரிமினல் நடவடிக்கையும் எடுத்துக் கொண்டனர்.

ரஷீதுக்கு தம் தொழிலை நடத்த முடியாத ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டது. முனிசிபாலிட்டியாரால் அந்த டவுனுக்குள் ஒரே ஒரு இடத்தில் தான் காய்கறி மொத்த வியாபாரம் நடத்தலாமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் போய் ரஷீது தம் வியாபாரத்தை நடத்தலாமென்றால் அங்கே மொத்த வியாபாரம் நடத்தும் பாத்தியம் ஒரே ஒருவருக்கு ஏலத்தில் விடப்பட்டு விட்டதால் ரஷீது அங்கும் போய், தம் வியாபாரத்தை நடத்தமுடியாமல் போயிற்று. வேறு இடத்தில் வியாபாரத்தை நடத்தவும் லைசென்சு கிடைக்கவில்லை,

ரஷீது சும்மா இருக்கவில்லை. தம் இஷ்டப்படி எந்த வியாபாரமும் தொழிலும் செய்யலாமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் தமக்குள்ள ஜீவாதார உரிமையை அந்த முனிசிபாலிட்டியார் பறித்து விட்டதாயும், முனிசிபாலிட்டியார் செய்த ஏற்பாடானது, தம்மைத் தம் வியாபாரத்தை நடத்தவொட்டாமலே தடை செய்து விட்டதென்றும் அதை ரத்து செய்ய வேண்டுமென்றும் அவர் நேரடியாகச் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுச் செய்தார். ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்பட்டால் கீழ் கோர்ட்டுகளுக்குப் போகாமலே நேரடியாகச் சுப்ரீம் கோர்ட்டுக்கே முறையிட்டுக் கொள்ளும் உரிமை இந்தியப் பிரஜை எவருக்கும் உண்டு.

சுப்ரீம் கோர்ட்டார் அந்த முனிசிபாலிட்டியால் ஏற்படுத்தப்பட்டிருந்த உப விதி (Bye-law) ஜீவாதார உரிமைக்கு முரணாக இருக்கிறபடியால் செல்லாதென அபிப்பிராயப்பட்டனர். முனிசிபல் விதியில் (1) முனிசிபாலிட்டியின் அனுமதியில்லாமல் ஒருவரும் மொத்த வியாபாரம் செய்யக் கூடாதென்றும், (2) முனிசிபாலிட்டியால் குறிப்பிடும் இடத்தைத் தவிர வேறு இடங்களில் வியாபாரம் நடத்தக் கூடாதென்றும் இருக்கிறதென்றும், ஆனால் அவ்விதம் வியாபாரம் செய்வதற்கு லைசென்சு வாங்கிக் கொள்வது சம்பந்தமாக யாதொரு ஏற்பாடும் விதியும் இல்லாததோடு அப்பாத்தியத்தை ஒருவருக்கே ஏலம் விட்டுவிட்டபடியால் இது வேறு எவரும் வியாபாரம் செய்வதையே அத்தறுதியாகத் தடுப்பது போல்தான் ஆகும் என்றும், நியாயமான நிபந்தனைகள் போட்டு வியாபாரம் செய்வதை முனிசிபல் சட்டப்படி லைசென்சு மூலம் ஒழுங்குபடுத்தலாமே ஒழிய இதுபோல் அத்தறுதியாகத் தடை செய்வது செல்லாதென்றும் தீர்ப்பளித்தனர். ரஷீது தம் இஷ்டப்படி வியாபாரம் செய்ய இப்பொழுது தடை ஒன்றுமில்லை.

## பழைய ஆடைகளை மலிவாகத் தெருவில் வாங்கியவர் - ஹைகோர்ட்டில்தான் விடுதலை அடைந்தார்.

கோர்ட்: அலகாபாத் (பிரயாகை) ஹைகோர்ட்.

நீதிபதி: கனம் நீதிபதி ரகுவீரதயாள் அவர்கள்.

ஆதாரம்: 1950 அலகாபாத் 497. (ஆல் இந்தியா ரிபோர்ட்டர்.)

காசி சர்வகலாசாலையின் அருகில் வசித்து வரும் ஜாகுரு என்பவர் கெட்டிக்காரரோ, அசடோ, தெரியாது. ஆனால் தெருவில் வந்த சில பழைய ஆடைகளை கெட்டிக்காரத்தனமாகக் குறைந்த விலைக்கு அவர் வாங்கியது அவருக்கு

187700

ஆபத்தையே விளைவித்தது. அதனால் இரண்டு கோர்ட்டுகளில் தண்டனை அடைந்த அவர் அலகாபாத் ஹைகோர்ட் வரையில் போய்த்தான் விடுதலை அடைய முடிந்தது.

விஷயம் ஒன்றுமில்லை. காசி பல்கலைக் கழகத்தில் படித்துவரும் ராமசந்திரசிங் என்ற மாணவரின் கம்பிளிச் சட்டை ஒன்று, கழுத்துக் குட்டை ஒன்று, பனியன் ஒன்று இம் மூன்று ஆடைகளும் 1949 ஜனவரி 2 ஆம் தேதி இரவு திருட்டுப் போய்விட்டன. ஜனவரி 6 ஆம் தேதியன்று சர்வ கலாசாலையின் சமீபத்தில் வசித்துவரும் நமது ஜாகுரு இந்த ஆடைகளை அணிந்திருப்பதை ஒரு மாணவர் பார்த்து விட்டார். அவர் உடனே போய் இதை ராமசந்தரிடம் சொன்னார். ஆடைகளை இழந்த ராமசந்தரும் அவருடைய சிநேகிதர்களும் ஜாகுருவின் வீட்டுக்குப்போய் அவரைக் கேட்டனர். ஜாகுரு அச் சமயத்தில் இந்த ஆடைகளை அணிந்து கொண்டிருக்கவில்லை. இருந்தாலும் உள்ளே போய், தம்மிடமிருந்த அந்த மூன்று ஆடைகளையும் கொண்டுவந்து இம் மாணாக்கர்களுக்கு முன் காண்பித்தார். இவைகளைத் துவாரகா என்ற ஒரு சின்னப் பையனிடம் ரூ. 10-க்கு பழைய விலைக்குத் தாம் வாங்கியதாகவும், இவை ஏது என்று தாம் அவனைக் கேட்டதாகவும், இவை தனக்கு மாணாக்கர்களால் பரிசாகக் கொடுக்கப் பட்டவை என்று அப் பையன் சொன்னதாகவும், அதை நம்பித் தாம் வாங்கியதாகவும் ஜாகுரு சொன்னார்.

இருந்தாலும் இந்த ஆடைகளைத் திருடிய குற்றத்திற்காகத் துவாரகாவின் பேரிலும், திருட்டுச் சாமான் என்று தெரிந்து வாங்கிய குற்றத்திற்காக ஜாகுருவின் பேரிலும் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருவரும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தண்டனை அடைந்தனர். ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜூம் அப்பீலில் இதை உறுதி செய்தார்.

ஜாகுரு மட்டில் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' செய்தார். ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான சட்டங்களை விளக்கி, ஜாகுரு குற்றவாளி அல்ல என்று அபிப்பிராயப்பட்டனர்.

இதன் சட்டத்தை கவனிப்போம். இந்தியன் பீனல் கோடு (Indian Penal Code) என்ற குற்றங்களைப் பற்றிய சட்டத்தின் 411 ஆவது பிரிவின்படி ஒருவர், திருட்டுச் சொத்தென்று தமக்குத் தெரிந்தோ, திருட்டுச் சொத்தாக இருக்கும் என்று நம்பக்கூடிய காரணங்கள் இருந்தோ, ஒரு சாமானைக் கெட்ட எண்ணங் கொண்டு வாங்கினாலும், வைத்திருந்தாலும் குற்றமாகும். இக் குற்றத்திற்கு மூன்று வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இதை அண்டிய ஒரு விதி இருக்கின்றது. அதாவது சமீபத்தில் திருட்டுப்போன சொத்து, யார் வசம் இருக்கிறதோ அவர் அச் சொத்து, தம்மிடம் எப்படி வந்ததென்று சொன்னாலொழிய, ஒன்று அவரே அதைத் திருடியிருக்க வேண்டும்; அல்லது அது திருட்டுச் சாமான் என்று தெரிந்தே அதை வாங்கி இருக்கவேண்டும் என்று நீதிபதி (வேறு ருசுவில்லாமலே) ஊகித்துக்கொள்ள ருசுச் சட்டம் (Evidence Act) அனுமதிக்கின்றது. இதில் நுட்பமான விஷயமென்ன வென்றால், திருட்டுச் சொத்தை வைத்திருப்பவர் அது தம்மிடம் எப்படி வந்ததென்று சமாதானம் சொல்லிவிட்டாலே போதும்; மேற்கண்ட விதம் நீதிபதி ஊகிக்கச் சட்டம் அப்பொழுது இடங் கொடுக்காது. அவர் சொல்லும் சமாதானம் பொய்யாக இருந்தாலும், வேறு ருசுவின் பேரில்தான் அவர் குற்றவாளி என்று நீதிபதி சொல்லமுடியும். சமாதானம் சொல்லப்பட்டு விட்டதால், யாதொரு ருசுவுமில்லாமல் குற்றத்தை ஊகித்துக் கொள்ளும் உரிமை நீதிபதிக்குக் கிடையாது.

இவ் வழக்கில் தோன்றும் ஜாகுருதான் தம்மிடம் அந்த ஆடைகள் எப்படி வந்ததென்று சொல்லிவிட்டாரே! மாணவர்கள் வேலையாட்களுக்குப் பரிசு கொடுப்பதில்லையா? அப்படிப் பரிசு வாங்கிய ஆடைகள் என்றுதானே அதை விற்ற பையன் சொன்னான்? அதை நம்பி, கொஞ்சம் மலிவாக இந்த ஆடைகளை வாங்கியதில் ஜாகுரு என்ன குற்றம் செய்துவிட்டார்? ஏன் அவர் இந்த ஆடைகள் திருடப்பட்டவை என்று நினைக்கவேண்டும்?

பின் ஏன் அவரை மாஜிஸ்ட்ரேட் தண்டித்தார் என்று பார்ப்போம். இந்த ஆடைகளைத் திருடியவன் ஒரு சிறிய பையன். ஆடைகளைப் பார்த்தால் பெரிய ஆசாமிகளுடையவை யென்று கண் பார்வைக்கே தெரிகின்றன. வெட்ட வெளிச்சமாக இந்த ஆடைகள் அச் சிறுவனுடையதாக இருக்க முடியாதென்று தெரிந்ததும் ஜாகுரு நியாயமாக மனதில் சந்தேகம் கொண்டிருக்க வேண்டியது. இருந்தும் இவைகளை மலிவாக வாங்கிய ஜாகுரு இவை திருட்டுச் சொத்தென்று தெரிந்தே வாங்கியதாகத்தான் பாவிக்கப்பட வேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பில் எழுதியிருக்கிறார்.

இது சரி அல்ல என்று உயர் நீதிபதி அவர்களின் அபிப்பிராயம். இந்த ஆடைகளைக் கொண்டுவந்த சிறுவன் "இவை என் ஆடைகள்" என்று சொன்னால் மாஜிஸ்ட்ரேட் சொல்வது சரியாகும். அச் சிறுவனுக்கு ஏன் இவ்வளவு பெரிய கோட், பனியன் என்று எவரும் சந்தேகிக்கலாம். ஆனால் சிறுவன் சொன்னது அப்படி அல்லவே; "நான் வேலை செய்பவன். என் எஜமான் எனக்கு இவைகளைப் பரிசாகக் கொடுத்தார்" என்றுதானே சொன்னான். பரிசு கொடுப்பவர் வேலை ஆளின் தேக அளவு பார்த்தா ஆடைகளைப் பரிசு கொடுப்பார்? தம் கையிலிருப்பதைத் தானே பரிசு கொடுப்பார். இதில் சந்தேகம் கொள்ளவேண்டிய இடம் ஒன்றுமில்லை என்றும், ஜாகுரு கெட்ட எண்ணத்துடன் திருட்டுச் சாமான் என்று தெரிந்து இந்த ஆடைகளை வாங்கியதாக ருசு இல்லை என்றும் அப்படி ஊகிக்கச் சட்டம் இடங் கொடுக்காதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, ஜாகுரு விடுவிக்கப்பட்டார்.

சந்தேகங்கள் தோன்றும் சர்தர்ப்பங்களில் பண்டங்களை வாங்குவதில் ஒரு ஆபத்து இருக்கின்றது. சட்டத்திலும் இந்த இடம் மிக நுட்பமான சந்தேகங்களை விளைவிக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

## பாகிஸ்தான் வழக்கு—ரம்ஸான் மாதத்தில் பகலில் உணவு அருந்துவோரை எவரும் பலாத்காரமாய்த் தடுத்து அடித்து, தண்டிக்கலாமா?

கோர்ட்: பெஷாவர் ஹைகோர்ட்
நீதிபதி: நீதிபதி கனம் முகமது ஷாபி அவர்கள்.
ஆதாரம்: 1950 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—பெஷாவர்-22.

இஸ்லாமிய மதத்தைத் தழுவியவர்களுக்கு ரம்ஸான் ஒரு புனித மாதம். பகலில் உணவு அருந்த மாட்டார்கள். ஆனால் இஸ்லாமிய மத சாஸ்திரங்களுக்கு முரணாகப் பகலில் உணவு அருந்துவோரை பாகிஸ்தானில் வசிக்கும் மற்ற இஸ்லாமானவர்கள் தாமே தடுத்து அடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்க முடியுமா என்ற பிரச்னை இவ்வழக்கில் ஏற்பட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த பெஷாவர் ஹைகோர்ட்டில் இவ்வழக்கில் முடிவான தீர்ப்பளித்த நீதிபதி அவர்களின் தீர்ப்பு இந்தியாவில் இருக்கும் நமக்குச் சில சந்தேகங்களை எழுப்புகின்றன. பாகிஸ்தானத்தில் அமுலில் இருப்பது எந்தச் சட்டம்? மத சாஸ்திரங்களில் இருக்கும் விஷயமெல்லாம் அப்படியே சட்டங்களாகப் பாவிக்கப்பட்டு அதன்படி பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும் குற்றங்களும், நிர்ணயம் செய்யப்படுகின்றனவா? அங்கே எப்படி இருந்தால் நமக்கென்ன? இவ்வழக்கைக் கவனிப்போம்.

பாகிஸ்தானத்தைச் சேர்ந்த வடமேற்கு எல்லை மாகாணத்தில் அபோடாபாத் என்ற ஒரு பட்டணம் இருக்கிறது. அங்கே இருக்கும் சில ஹோட்டல்களிலும் டீ கிளப்புகளிலும் ரம்ஸான் மாதத்தில் பகல் வேளையில் உணவும் டீ முதலிய பானங்களும் வாடிக்கைகாரர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன. இவ்விதம் இஸ்லாமிய மத சாஸ்திரத்தால் தடுக்கப்பட்ட ஒரு காரியத்தைச் செய்ய அவ்வூரிலிருக்கும் சில பொது ஜனங்கள் விடவில்லை. இவர்கள் கூட்டமாகக் கூடி, கையில் தடிக் கம்புகளை எடுத்துக்கொண்டு பகல் நேரத்தில் உணவு விற்கும் ஹோட்டல்களில் ஒவ்வொன்றிலும் நுழைந்து, உணவு அருந்திக் கொண்டிருப்பவர்களையும் ஹோட்டல்காரர்களையும் கையப் புடைத்து உணவு டீ முதலிய வைத்திருந்த பாத்திரங்களையும் கோப்பை முதலிய சாமான்களையும் தவிடு பொடி ஆக்கினர். உணவு அருந்தியவர்களும் சிலர் எதிர்த்துச் சண்டை போட்டுப் பார்த்தனர்; முடியவில்லை.

இவ்விதம் கலகம் செய்தவர்கள் மீது பீனல் கோடின்படி கலகம் செய்த குற்றத்திற்காகவும், கெட்ட எண்ணத்துடன் வேறு ஒருவர் சொத்தில் பிரவேசித்த குற்றத்திற்காகவும் வழக்குத் தொடரப்பட்டு, ஒவ்வொருவருக்கும் இரண்டு வருஷம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஹஸாரா செஷன்ஸ் ஜட்ஜும் இதை உறுதி செய்தார். தண்டனை அடைந்தவர்கள் பெஷாவர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டில் எதிரிகளுக்காக அவர்களின் வக்கீல் வாதாடியதும், அதற்கு நீதிபதி அவர்கள் சொல்லி யிருக்கும் சமாதானமும்தான் இவ்வழக்கில் கவனிக்கத் தக்கவை.

தண்டனை அடைந்த எதிரிகளுக்காக வாதாடிய வக்கீல் இஸ்லாமிய மத புத்தகங்களிலிருந்து ஒரு வாக்கியத்தை எடுத்துக் காண்பித்தார். அதன்படி எதிரிகள் செய்தது குற்றமாகாதென்றும் வாதாடினார். அதாவது:—"ஷரியத்துக்கு மாறாக ஒருவர் ஒரு செய்கை செய்து கொண்டிருப்பதை நீ பார்த்தால் உன் கையினால் அவர் செய்வதை நிறுத்தவேண்டும் ("கையினால்" என்பதற்கு—அடித்தோ, இழுத்தோ, உடைத்தோ, கிழித்தோ என்று ஒரு புத்தகத்தில் இதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.) உன் கையினால் அவர் செய்வதைத் தடுக்க முடியாவிட்டால், உன் நாக்கினால் தடுக்க வேண்டும்; அதுவும் உன்னால் செய்ய முடியா விட்டால் நீ அவருடன் ஒத்துழைக்கக் கூடாது" என்று இருக்கும் வாக்கியத்தை அனுசரித்துத் தம் கக்ஷிக்காரர்கள் மத ஆசாரத்திற்கு மாறாக ரம்ஸான் மாதத்தில் பகலில் உணவு அருந்தியவர்களைக் கையால் தடுத்தார்கள்; இது எப்படி குற்றமாகும் என்று வாதாடினார்.

நீதிபதி அவர்கள் இம்மத வாக்கியத்தை ஒப்புக் கொண்டார். ஆனால் "கையினால் தடுக்க வேண்டியது" என்பதற்கு "அடித்தோ இழுத்தோ, உடைத்தோ, கிழித்தோ செய்ய வேண்டும்" என்று இதற்கு அர்த்தம் எழுதப்பட்டிருக்கும் புத்தகம் அவ்வளவு சரி அல்ல என்றும் எடுத்துக்காட்டினார். இவ்விதம் செய்வது வேறு ஒரு புனித வாக்கியத்திற்கு மாறாகப் போய்விடும். அதாவது:—"நீ அவர்களுடன் மிருதுவாகப் பழகவேண்டும் என்பதே ஆண்டவனின் அருள். அவர்களிடம் நீ குரூரமாகவோ கடினமாகவோ நடந்து கொண்டால் அவர்கள் உன்னை விட்டுப் பிரிந்து போய் விடுவார்கள். ஆகையால் அவர்களின் பிழைகளைப் பொருட்படுத்தாதே; ஆண்டவன் அவர்களை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்" என்றும், வேறு ஒரு இடத்தில் ரம்ஸான் மாதத்தில் பட்டினியாக இருப்பதைப் பற்றி "உங்களில் யாராவது தேக அசௌக்கியமாக இருந்தாலும், பிரயாணத்திலிருந்தாலும், பட்டினி இருப்பதில் குறைந்த நாட்களைப் பின்பு வரும் நாட்களில் பூர்த்திசெய்து கொள்ளலாம்" என்ற வாக்கியத்தையும் நீதிபதி அவர்கள் எடுத்துக் காண்பித்து ரம்ஸான் மாதத்தில் உணவு அருந்துவதும் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றும்; ஆகையால் வேறு ஒருவர் உண்வு அருந்துவதைப் பார்த்தால், அவர் மேற்கண்ட காரணங்களினால் உணவு அருந்த மதவாக்கியப்படி அனுமதிக்கப்பட்டவரா அல்லவா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும்; அப்படி விசாரித்தும் அவர் உணவு அருந்துவது தவறு என்று ஏற்பட்டால் அதை அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டுமென்றும், அந்த அதிகாரி மத புத்தகங்களில் விதிக்கப்பட்டிருக்கும் அதற்கான தண்டனையை விதிப்பார் என்றும் இதற்கும் ஒரு மதநூல் வாக்கியத்தை எடுத்து உயர் நீதிபதி அவர்கள் காண்பித்திருக்கிறார். மேலும் பிறர் இடத்தில் அதன் சொந்தக்காரருடைய அனுமதியின்றி ஒருவரும் நுழையக் கூடாதென்ற ஒரு மதநூல் வாக்கியத்தையும் நீதிபதி அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

மேலும் இஸ்லாமிய மதநூலில் பல குற்றங்களுக்கான தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும், ரம்ஸான் மாதத்தில் உபவாசம் இருக்காதவர்களுக்கு யாதொரு தண்டனையும் விதிக்கப்படவில்லை என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

எப்படி இருந்தபோதிலும் எதிரிகள் யார் யாரை அடித்தார்களோ அவர்கள் மதநூல் படி உணவு அருந்த வாயக்குள்ளவர்களா இல்லையா என்று விசாரிக்காமலே அவர்களை அடித்தபடியாலும், எதிரிகளால் அடிபட்டவர்கள் அக்காலங்களில் உணவு அருந்திக் கொண்டுதான் இருந்தார்கள் என்றாவது தகுந்த ருசு இல்லாததினாலும் எதிரிகள் செய்தது குற்றமென்றும் அவர்கள் அடைந்த தண்டனை சரிதான் என்றும் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.

[குறிப்பு:—இவ்விதக் குற்றம் இந்தியாவில் ஏற்பட்டிருந்தாலும் எதிரிகள் கடுமையாகத் தண்டிக்கத்தான் படுவார்கள். ஆனால் எதிரிகளின் வக்கீல் வாதாடியதும் நீதிபதியின் அபிப்பிராயமும் வேறு தினுசாக இருக்கும், இந்தியப் பிரஜை ஒருவர் செய்தது குற்றமா அல்லவா என்பதை நமது நீதிபதிகள் எந்த மதநூல்களையும் ஆராய்ந்து கண்டுபிடிக்க மாட்டார்கள்]

# அடுத்து வரும் இதழ்களில்

[மேலே கண்ட விஷயங்களில் உங்களுக்கு சந்தேகங்கள் இருந்தால், அடுத்து அடுத்து வரும் "வக்கீல்" இதழ்களில் அச் சந்தேகங்களைத் தெளிவு செய்து கொள்ளலாம். இவ்வித சந்தேகங்கள் கிளம்பிய வழக்குகளில், உயர் நீதிபதிகள் எவ்விதம் அபிப்பிராயப்பட்டனர் என்று நீங்கள் "வக்கீல்" மூலம் தெரிந்து கொள்ளலாம்]

1. ஒருவர் பைத்தியமாக இருந்தால் அவருடைய சொத்துக்களை அவருடைய "கார்டியன்" என்று எழுதி அவருடைய மனைவி குத்தகைக்கு விடுவது செல்லுமா?

2. ஒரு ஹிந்து தகப்பன் சுயமாகச் சம்பாதித்த சொத்தைத் தம் மகனுக்கு 'உயில்' மூலம் கொடுத்தால், அச்சொத்து அம்மகனுடைய தனிப் பாத்தியமுள்ள சொத்தா? அல்லது அம்மகனுக்கும், மகனுடைய மகன்களுக்கும் பாத்தியமுள்ள குடும்பச் சொத்தா?

3. ஒரு ஹிந்து ஸ்திரீயின் ஜீவனாம்சத்திற்காக ஒதுக்கப்பட்ட சொத்தில் அவளுடைய உரிமை என்ன? அவள் ஆயுள்வரை மட்டில்தான் அனுபவிக்கலாமா? அல்லது விற்பனை முதலிய பராதீனங்கள் செய்யலாமா?

4. பத்திரத்தை எழுதியவரின் கையெழுத்து சாக்ஷிக் கையெழுத்தாகுமா?

5. மேளதாளமில்லாமலும் புரோகிதர் முதலியோர் இல்லாமலும் ஒரு கோயிலில் தாலியை மட்டில் கட்டியவர் பல தாரத் தடைச் சட்டப்படி 'இரண்டாவது மணம்' செய்து கொண்ட குற்றம் செய்தவர் ஆவாரா?

6. முனிசிபாலிடியிலுள்ள ஒரு கட்டடத்திற்கு முனிசிபாலிடியார் நியாயமற்ற முறையில் மனம்போன போக்குப்படி வாடகை மதிப்புப் போட்டு அதற்கான வரியை விதித்தால், சிவில் கோர்ட் மூலம், பாதிக்கப் பட்டவர் பரிகாரம் தேடிக்கொள்ள இடமுண்டா?

7. சினிமாப் பார்க்க டிக்கட் வாங்கி, கொட்டகைக்குள் போனவர் மீது, ஒரு சுவர் இடிந்து விழுந்து அவருக்குக் காயம் ஏற்பட்டால் சினிமா நடத்துபவர் அவருக்கு நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப் பட்டவரா?


வியாபாரிகளுக்கேற்ற புத்தகம்!
லிப்கோ
**பொது விற்பனை வரி**

- சட்ட நுட்பங்களை நன்கு விளக்குவது.
- விற்பனை வரி சம்பந்தமான ஆக்ட், ரூல்ஸ், பாரங்கள் முதலியவை எல்லாம் அடங்கியது.
- கனம் பிரதம மந்திரியாரவர்களாலும். பல பிரபுக்களாலும் புகழப்பெற்றது.

தமிழ் பதிப்பு: விலை ரூ 5-15-0. தபால் மூலம் ரூ. 6-8-0. ஆங்கிலத்திலும் இதே விலைக்குக் கிடைக்கும்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, விழுப்புரம் அல்லது எம். தாமோதரம் கம்பெனி, அப்பா பில்டிங், 9/286, எஸ்பிளனேட், சென்னை—1. அல்லது ஆபீஸ் எக்கியூப்மெண்ட் கம்பெனி, 2, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1, அல்லது ரெயில்வே புஸ்தக ஸ்டால்கள்.

"சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K. R. அப்ளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.
"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
வி. பி. பி, தனி
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P.O. (S.I.)

சட்ட சம்பந்தமான
டிரேட் மார்க்
ரிஜிஸ்தர் செய்ய
ஏஜண்டு எச். பி. என்
K.A. ஹமீத் கம்பெனி
பேகம்பூர், திண்டுக்கல்

டிரேட் மார்க் சட்ட விபரங்கள் அடங்கிய புத்தகத்திற்கு 4 அணா தபால் ஸ்டாம்பு அனுப்புக.

உயர்ந்த
தந்தி "ROYAL"
பட்டு & ஜரிகை
ஜவுளி உற்பத்தியாளர்
பாலகிருஷ்ணையர்.
8. ஸௌராஷ்டிர பெரிய தெரு, கும்பகோணம்



# கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே. கார்டுகளில் எழுதப்படும் கேள்விகளும் பென்சிலால் எழுதப்படும் கேள்விகளும் கவனிக்கப்படமாட்டா.**

**கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க:** "வக்கீல்" பத்திரிகையில் வரிசைக் கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்யேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை **ரிஜிஸ்டர் தபால் மூலம்** காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும் **ரூபாய் இரண்டு** தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

**கேள்வி:** (L. 3426-அங்குபத்தர்-புவனகிரி) சொந்தக் கட்டடங்களைப் பிரித்து வேலை செய்ய வேண்டியதற்கு இரும்புச் சாமான்கள் சிமிண்ட் முதலியவைகள் கண்ட்ரோல் விலையில் கிடைக்க எந்த எந்த ஆபீசுகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்? விவசாயிகள் வண்டிக்கட்டு வாங்க எங்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்?

**பதில்:** இரும்புச் சாமானுக்கு டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்டு கமாடிடீஸ் என்ற அதிகாரிக்கு மனுப்போடலாம். சிமெண்டு இப்பொழுது எங்கும் கிடைக்கின்றது. மனு இல்லாமலே 20 மூட்டைகள் வாங்கலாம். வண்டிக் கட்டுகளுக்கு தாலூக்கா விவசாய டிமான்ஸ்ட்ரேடர் என்ற உத்தியோகஸ்தருக்கு மனுப் போடலாம்.

**கேள்வி:** L. 3435 - கணேசய்யர் - சிதம்பரம்) ஒரு வியாபாரிக்கு ஒரே ஊரில் பல பிராஞ்சுகள் இருந்தால், சென்னை விற்பனை வரிச் சட்டப்படி, ஒரு பிராஞ்சிலிருந்து மற்றப் பிராஞ்சுக்குத் துணிகளை விற்பனை செய்தால் அதற்கு விற்பனை வரி உண்டா? அசல் விலைக்குத்தான் விற்கவேண்டும் என்றோ, லாபம் சேர்த்து விற்கலாம் என்றோ சட்டமிருக்கிறதா?

**பதில்:** இதில் "விற்பனை" இல்லை. ஒருவரே தமக்குச்சொந்தமான ஒரு கடையிலிருந்து தம் துணிகளைத் தம்முடைய வேறு கடைக்கு மாற்றுவது "விற்பனை" ஆகாது. இதற்கு விற்பனை வரி கிடையாது. "விற்பனை" என்பதில் ஜங்கம சொத்தின் பாத்தியம் மாற்றப்பட வேண்டும்.

**கேள்வி:** (L. 3452 - முகமதுபாஷா) ஒரு முஸ்லீம் மைனர் மேஜராவதற்கு இருபது நாட்களுக்கு முன்னதாகவே அவன் சொத்தை அடமானம் வைத்ததாகப் பத்திரம் எழுதி, அப்பத்திரத்தில் கார்டியனிடமிருந்து மைனர் சொத்தை ஒப்புக்கொண்டு விட்டதாகவும் எழுதி அதில் கார்டியன் மைனருடைய கையெழுத்து வாங்கி விட்டார். அதிலிருந்து தொடர்ந்த இரண்டு வருஷத்தில் மேஜரானவர் சில சொத்துக்களை விற்றும் பல கடன்கள் வாங்கியும் எல்லாவற்றிலும் மாஜி கார்டியனே கையெழுத்து வாங்கிவிட்டார். மேஜரானவர் தம்முடைய

இருபதாவது வயதில் விபரம் தெரிந்து வழக்குத் தொடர்ந்தால் சொத்து திரும்புமா?

**பதில்:** மைனராக இருக்கும்பொழுது எழுதிக்கொடுத்த அடமானம் செல்லாது. ஆனால் மேஜரான பிறகு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பத்திரங்கள் சட்டப்படி செல்லும். ஆனால் மோசடி போன்ற சிற்சில காரணங்களினால் அவைகளையும் செல்லாதென செய்யப் பத்திரம் எழுதிக்கொடுத்தவர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**கேள்வி:** (L. 3467 -ஆதிகேசவலு - வந்தவாசி) ஒருவர் நிலத்தை ஒத்தி வைத்திருந்தால் அந்த ஒத்திக்கு எந்த வருஷத்திலிருந்து ரூபாய் 100ச்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 3—0—0 வீதம் கழியும்?

**பதில்:** விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி 30-9-1947ச்கு முன் ஏற்பட்ட ஒத்திகளுக்கு ஒத்தி வைத்த தேதியிலிருந்து அசலில் வருஷம் ஒன்றுக்கு 30ல் 1 பங்கு, (அதாவது ரூபாய் 100க்கு ரூ. 3-5-4) வீதம் கழிவு ஏற்படும். இது பொதுவிதி. பல விதி விலக்குகள் இருக்கின்றன. விதி விலக்குள்ள சந்தர்ப்பத்தில் அசலில் யாதொரு கழிவும் ஏற்படாது.

**கேள்வி:** (ஷை) ஒருவன் வீட்டைக் கிரயம் செய்துவிட்டு அந்த வீட்டிலேயே யாதொரு வாடகையுமில்லாமலும் வாடகை குடக்கூலிப் பத்திரம் எழுதிக் கொடுக்காமலும் 8 வருஷ காலம் இருந்தால், கிரயம் வாங்கியவர் கிரயம் கொடுத்தவரை வீட்டை விட்டுக் காலி செய்யும்படி சொல்ல உரிமை உண்டா?

**பதில்:** உண்டு, கிரயம் ஏற்பட்டு பன்னிரண்டு வருஷங்களுக்குள் கிரயம் பெற்றவர் தமக்கு வீடு சுவாதீனம் கிடைக்கத் தாவா செய்யலாம் என்று பொதுவாகச் சொல்லலாம்.

**கேள்வி:** (ஷை) விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி எந்தத் தேதியிலிருந்து வருஷம் 1க்கு ரூ. 100க்கு ரூ. 5—8—0 வீதம் வட்டி என்பது?

**பதில்:** விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் அமுலுக்குவந்த தேதியாகிய 22-3-1938க்குப் பின் ஏற்பட்ட கடன்களுக்கு 29 - 7 - 1947க்குப்பிறகு வருஷம் 1க்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 5 - 8 - 0. வீதம்.

**கேள்வி:** (L. 3492—ஷண்முக சுந்தரம் செட்டியார் — பரமக்குடி.) விற்பனைவரியை மாதாமாதம் A. 3 மூலம் செலுத்தி வருபவர்கள் வருடாந்தர ரிடர்ன் அனுப்ப வேண்டுமா? அவர்கள் D. C. T. O. விடம் மாத விற்பனைக்குரிய வரியைச் செலுத்துவதற்கு ஒவ்வொரு வருஷமும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமா?

**பதில்:** மாதாமாதம் A. 3 நமூனாப்படி ரிடர்ன் அனுப்பி விற்பனை வரிசெலுத்துபவர்கள் வருடாந்திர ரிட்டர்ன் அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல்தேதிக்கு முன்பே இவ்வித மாத ரிட்டர்ன் அனுப்பி வரி செலுத்தப் போவதை விற்பனைவரி அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

**கேள்வி:** (L. 3505 – செங்குட்டுவன்-திருவையாறு.) (1) காலை 9 மணியிலிருந்து 1மணிவரையும், மாலை 4 மணியிலிருந்து 8மணிவரையும் வேலை நேரங்களாகக் கொண்ட கடையில் ஷை வேலை நேரங்களில் மட்டில் வேலையாட்களை வைத்துக் கொண்டு விட்டு மற்ற நேரங்களில் (அதாவது மேலே குறித்துள்ள வேலை நேரம் நீக்கி காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை) கடைக்காரர் மட்டில் கடையைத் திறந்துவைத்துக் கொண்டு வியாபாரம் நடத்தலாமா? (2) மேற்சொன்னவிதம் கடைக்காரர் மட்டில் வியாபாரம் நடத்தும் காலங்களில் அக்கடைச்சிப்பந்தி வேறு ஒரு கடையில் வேலை செய்து வரலாமா?

**பதில்:** (1) சட்டபடிக்கு திறந்துவைத்துக் கொள்ளக்கூடிய நேரங்களில் முதலாளிமட்டில் வியாபாரம் செய்ய ஷாப் சட்டத்தில் தடை ஒன்றும் இல்லை. (2) சிப்பந்தியும் வேறு இடத்தில் வேலை செய்வதையும் ஷாப் சட்ட ஷரத்துக்கள் தடுக்கவில்லை.

**கேள்வி:** (L. 3516-சீனுவாஸாசாரியார்-எளம்பள்ளி) ஒரு ஹிந்து, இன்ஷ்யூரன்ஸ்செய்து கொண்டவர் இறந்துவிட்டார், அவருக்கு மூத்தமனைவியின் மகள், இரண்டாவது மனைவி, பாகம் பிரித்துக்கொள்ளாத தம்பி, இவர்கள்

இருக்கிருர்கள். இறந்தவர் இன்ஷ்யூரன்ஸ் பாலிசியைப்பற்றி யாதொரு நாமினேஷன், அசைன்மெண்ட், செட்டில்மெண்ட், உயில் ஒன்றும் எழுதிவைக்கவில்லை. இன்ஷ்யூரன்ஸ் தொகை யாருக்குச் சொந்தம்?

**பதில்:** சாதாரணமாய் மனைவியைச் சேரும்.

**கேள்வி:** (L. 3531 - அப்துல் ரஹீம்) ஒரு முஸ்லீம் பெண் கலியாணமாகி சில காலம் புருஷனுடன் கஷ்டத்துடன் வாழ்க்கை நடத்தி வந்த போது சென்ற ஒரு வருஷமாகச் சாப்பாடு உடை முதலியது கொடுக்காததால் ஷை பெண் தன் தாயார் வீட்டில் இருக்கிறது. கணவன் மறு விவாகம் செய்து கொண்டார். பெண்ணுக்குப் புருஷனுடன் வாழ அறவே விருப்பமில்லை. விவாகரத்து செய்துகொள்ள முடியுமா?

**பதில்:** 1939 ஆம் வருடத்திய முகமதிய விவாகரத்துச்சட்டப்படி, (The Dissolution of Muslim Marriages Act 1939) இரண்டு வருடங்கள், புருஷன் மனைவியை அனுதரவு செய்தால் மனைவி கோர்ட்டில் மனுப்போட்டு விவாகரத்து கேட்கலாம்.

**கேள்வி:** (L. 3533 - சந்தானராமன்) ஒருவருடைய மனைவி கணவனுடன் சொல்லிக் கொள்ளாமல் அவள் சீதனச் சாமான்களுடன் போய்விட்டாள். அவள் இருக்கும் இடம் கணவனுக்குத்தெரியாது. அப்படி இருக்க, கணவன் வேறு மணம் புரியலாமா? எத்தனை வருஷம் கணவன் சம்மதமில்லாமல் மனைவி ஓடிப் போயிருந்தால், கணவன் மறுமணம் செய்து கொள்ளலாம்?

**பதில்:** சென்னை (இந்து) விவாக ரத்துச் சட்டப்படி மனைவி காரணமில்லாமல் புருஷனை விட்டுவிட்டு மூன்று வருஷம் சென்ற பிறகு, புருஷன் கோர்ட் மூலம் விவாகரத்து செய்து கொண்டு பிறகுதான் மறுமணம் செய்து கொள்ளலாம்.

**கேள்வி:** (L. 3548-சொக்கலிங்கம்-உடுமலை) ஒருவர் (இந்து) ஆண் சந்ததியில்லாத நிலைமையில், தம் சொத்தின் பெரும் பாகத்தைத் தம் மனைவிக்கும், மகள்களுக்கும் அவர்கள் ஆயுள்வரை அனுபவிக்கும்படி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து, சொத்தைச் சுவாதீனம் விட்டு விட்டார். பிறகு அவர் மற்றொரு மணம் செய்துகொண்டு அந்த இரண்டாவது மனைவிக்கு ஒரு பெண்ணும், பிறகு மூத்த மனைவிக்கே ஒரு ஆண் குழந்தையும் பிறந்தன. சொத்தை உடையவர் இறந்தால், செட்டில்மெண்ட்செய்யப்பட்ட சொத்துக்களுக்கு வார்சு யார்? செட்டில்மெண்ட் செய்யப்படாத சொத்துக்களுக்கு வார்சு யார்? இளைய தாரத்திற்கும் அவள் மகளுக்கும் எந்த சொத்தில் எந்த பாத்தியம் உண்டு?

**பதில்:** (1) செட்டில்மெண்ட் செய்யப்படாத சொத்துக்களுக்கு இறந்தவருடைய மகனும் இரு மனைவிகளும் வார்சுகள். அச் சொத்துக்களில் ஒரு பாதியை அவருடைய மகன் அடைவார். மற்றொரு பாதியை இரு மனைவிகளும் தங்கள் ஆயுள் வரை அனுபவிக்கலாம். அவர்கள் இருவருடைய ஆயுளுக்கும் பிறகு, அச் சொத்துக்களை மகனே அடைவார். (2) செட்டில்மெண்ட் செய்யப்பட்ட சொத்துக்களை அடைந்த முதல் மனைவியும் அவள் மகள்கள் இவர்களும் செட்டில்மெண்ட்படி அனுபவிக்கலாம். அவர்களுடைய ஆயுளுக்கு பின்பும், இரண்டாவது மனைவி இருந்தால் அவள் ஒரு பாதியையும், மகன் மற்றொரு பாதியையும், அடைவார்கள். இதிலும் இரண்டாவது மனைவி அடையும் பாதியை அவள் ஆயுள்வரைதான் அனுபவிக்கலாம். அவளுக்குப் பிறகு மகன்தான் அதற்கும் வார்சு, இரண்டாவது மனைவியின் மகளுக்கு சொத்து பாத்தியம் ஒன்றும் இல்லை. ஆனல் அம்மகள் கலியாணம் ஆகும் வரை தகப்பன் சொத்துக்களிலிருந்து போஷிக்கப்பட வேண்டும்.

# இன்ஷ்யூரன்ஸ் சட்ட விதிகள்

சமீபத்தில் 1938 ஆம் வருடத்திய இன்ஷ்யூரன்ஸ் சட்டம் திருத்தப்பட்டதால் (1950 ஆம் வருடத்திய 47 ஆவது மத்திய சட்டத்தால்) அதற்கிணங்க இன்ஷ்யூரன்ஸ் விதிகளில் திருத்தங்களும் புதிய விதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளில், இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகள் பொதுமக்கள் இவர்கள் சம்பந்தப்பட்டவரையில் உள்ள விதிகளின் சுருக்கம் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது:—

**ஏஜண்டுகள் லைசென்சு கட்டணம்:—**

இன்ஷ்யூரன்ஸ் சட்டம் செக்ஷன் 42 திருத்தப் படுவதற்கு முன்பு ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு தம் லைசென்சை ஒவ்வொரு வருஷமும் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும், புதிதாக லைசென்சு வாங்கவும் அதைப் புதுப்பித்துக் கொள்ளவும் கட்டணம் ரூ. 3-க்கு மேற்படாமல் இருக்கும்படி சர்க்கார் விதிகள் செய்யலாமென்றும் இருந்தது. 1950 ஆம் வருடத்திய 47 ஆவது சட்டப்படி இந்த செக்ஷன் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட செக்ஷன் 42-ன்படி ஏஜண்டு லைசென்சு வாங்கவும், அதைப் புதுப்பிக்கவும் ரூ. 10-க்கு மேற்படாமல் கட்டணம் விதித்து, விதிகள் செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. மேலும் ஒரு தடவை வாங்கிய லைசென்சு மூன்று வருஷங்களுக்கு அமுலில் இருக்கும் என்றும் சட்டம் திருத்தப்பட்டது. இதை அனுசரித்து இப்பொழுது சர்க்காரால் கீழ்க்கண்டபடி விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதிகளின் படி ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டாக இருக்க லைசென்சு வாங்கவும், லைசென்சைப் புதுப்பிக்கவும் கட்டணம் ரூ. 5. லைசென்சில் கண்ட கெடு (அதாவது 3 வருஷம்) முடிவதற்கு 30 தினங்களுக்கு முன்பே புதுப்பித்துக் கொள்ளச் செய்யப்படும் மனு கண்ட்ரோலருக்குப் போய்ச் சேரவேண்டும். தாமதமாக மனுப்போட்டால் அதிக் கட்டணம் ரூ. 2 (விதி 16).

**எப்படி லைசென்சு வாங்குவது; அல்லது லைசென்சைப் புதுப்பித்துக் கொள்வது?**

புதிதாக இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டாக இருப்பவர்கள் நமூனு 5 படிக்கும் ஏற்கனவே உள்ள லைசென்சைப் புதுப்பித்துக்கொள்ள நமூனு 5 A படிக்கும் மனுப் போடவேண்டும். நமூனுக்கள் இன்ஷ்யூரன்ஸ் கண்ட்ரோலரிடமிருந்து வரவழைத்துக் கொள்ளலாம். மனுதார் கட்ட வேண்டிய கட்டணம் ரூ. 5 அல்லது ரூ. 7 க்கும் உள்ள ஸ்டாம்பை மனுவில் ஒட்டவேண்டும். மனுவைப் பரிசீலனை செய்து, யாதொரு இடையூறுகளும் (disqualifications) இல்லாதிருந்தால் நமூனு 5 B படி லைசென்சு கொடுக்கப்படும். விவரங்கள் சரிவரக் கொடுக்கப்படாத மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் லைசென்சு கெடு முடிந்த பிறகு கண்ட்ரோலருக்குப் போய்ச் சேரும் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஆனால் லைசென்சில் கண்ட கெடு முடிவடைந்த பிறகு அதைப் புதுப்பித்துக் கொள்ள மனுச் செய்தால் அத்துடன் ரூ. 30 ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். லைசென்சைப் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால் அதிக நஷ்டம் ஏற்படும் என்று கண்ட்ரோலர் முடிவுக்கு வந்தால்தான் இவ்விதம் கெடுக் கடந்த பிறகு போடப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் கெடுவுக்குப் பிறகு செய்யப்படும் மனுக்களில், லைசென்சைப் புதுப்பிக்காவிட்டால், மனுதாருக்கு எவ்விதம் அதிக நஷ்டம் ஏற்படும் என்பதை விளக்கக் கூடிய எல்லா விஷயங்களையும் விவரமாய்க் கண்டு எழுதப்பட வேண்டும். இதற்குத் தஸ்தவேஜுகள் மூலம் ருசுவேண்டுமென்று கண்ட்ரோலர் கேட்டால் அவைகளை மனுதார் அனுப்ப வேண்டும் (விதி 16 A).

**பிரதான ஏஜண்டுகள்:—** (Principal Agent or Chief Agent) அவ்விதம் இருக்க, சர்ட்டிபிகேட் வாங்கவும் புதுப்பித்துக் கொள்ளவும் கட்டணம் ரூ. 25.

**விசேஷ ஏஜண்டுகள் :-** (Special Agent) சர்ட்டிபிகேட் வாங்கவும், புதுப்பித்துக் கொள்ளவும் கட்டணம் ரூ. 10. இவைகள் ஸ்டாம்பாக மனுவில் ஒட்டப்படவேண்டும். இவர்கள் சர்ட்டிபிகேட்டில் கண்ட கெடுவுக்குள் புதுப்பித்துக் கொள்ள மனுப் போடாமல் பிறகு 12 மாதத்திற்குள் மனுச்செய்தால் பிரதான ஏஜண்டுகள் அதிகமாக ரூ. 5 ம் விசேஷ ஏஜண்டுகள் அதிகமாக ரூ. 3 ம் அதிகக் கட்டணம் கட்டவேண்டும். இவர்கள் நமூனு V c படி சர்ட்டிபிகேட்டுக்கு மனுவும் நமூனு V d படி புதுப்பிக்க மனுவும் செய்யவேண்டும் (விதி 16 c).

**லைசென்சு அல்லது சர்ட்டிபிகேட் காணுமற்போனல் :—** ரூ. 1 செலுத்தி ட்யூப்ளிகேட் லைசென்சும் ரூ. 2 செலுத்தி ட்யூப்ளிகேட் சர்ட்டிபிகேட்டும் வாங்கிக் கொள்ளலாம். இதவும் ஸ்டாம்பாகவே மனுவில் ஒட்டிவிடவேண்டும் (விதி 16 d).

**எவ்வித ஸ்டாம்பு ஒட்டவேண்டும் :—** ஏஜண்டுகளும், பிரதான ஏஜண்டுகளும் விசேஷ ஏஜண்டுகளும் லைசென்சு அல்லது சர்ட்டிபிகேட் வாங்கவும் புதுப்பிக்கவும் செலுத்த வேண்டிய தொகை "இந்திய சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ்" ஸ்டாம்புகளாக ("Government of India Insurance" Stamps available from a Government treasury) ஒட்டவேண்டும். இந்த ஸ்டாம்புகளே, சர்க்கார் டிரஷரியில் வாங்கிக் கொள்ளலாம். ஒருவர் தவறுதலாக அதிக ஸ்டாம்பு ஒட்டிவிட்டாலும், லைசென்சு அல்லது சர்ட்டிபிகேட் கொடுக்கப்படா விட்டாலும் ஸ்டாம்புத் தொகையை மனுச்செய்து திரும்ப வாங்கிக் கொள்ளலாம் (விதி16f 16g).

**லைசென்சு அல்லது சர்ட்டிபிகேட் :—** இவை கண்ட்ரோலரால் ரத்து செய்யப்பட்டால் அது விபரம் இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். இது அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்படும். ஏஜண்டும் லைசென்சு அல்லது சர்ட்டிபிகேட்டைத் திருப்பி அனுப்பிவிடவேண்டும் (விதி 16 h).

புதிய திருத்தச் சட்டப்படி போனஸ் லாபம் நீக்கி ரூ. 2000 - க்கு மேற்படாத பாலிசிகள் சம்பந்தமாய், தொகை அடையப் பாத்தியம் கொண்டாடுபவர்கள் இனி சிவில் கோர்ட்டில் நடவடிக்கை எடுக்கக் கூடாது: அது சம்பந்தமாய் இன்ஷ்யூரன்ஸ் கண்ட்ரோலருக்குத்தான் மனுச் செய்து கொள்ளவேண்டும். அப்படி தொகை கிடைக்கக் கொடுக்கப்படும் மனுவுக்கு ரூ. 100-க்கு ரூ. 1 வீதம் ஸ்டாம்பு ஒட்டவேண்டும். ஆனல் தொகை எவ்வளவு குறைவாக இருந்தாலும் ரூ. 10-க்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். இந்த ஸ்டாம்பும் "இந்திய சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு லைசென்சு கட்டண" ஸ்டாம்பாக மனுவில்ஒட்டவேண்டும். ("Government of India Insurance Agent Licence Fee" Stamps available on payment from a Government treasury) (விதி 24A).

[குறிப்பு :-புதிய இன்ஷ்யூரன்ஸ் விதிகளில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் நிர்வாக விஷயமாகவும், பங்குகளைப் பற்றியும், கட்டணவிகிதங்களைப் பற்றியும் இன்ஷ்யூரன்ஸ் கமிட்டிகள் கவுன்சில்களின் அமைப்புப் பற்றியும் விவரமான விதிகள் இருக்கின்றன.]

(18—8—1950 இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு-பாகம் II செக்ஷன் 3, பக்கம் 541)

தாக சாந்தி! மன இன்பம்!!
நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத் பான வகைகள், விலை நயம், அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!
**பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி**
103, பெரிய தெரு, :: கும்பகோணம்.

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
## இதர சர்க்கார் அறிக்கைகள்

# சரக்கு சப்ளை விலை:- அவசரச் சட்டத்தின் கீழ் சர்க்கார் உத்தரவுகள்

### சென்னை ராஜ்ய அதிகாரிகள்

1950-ஆம் வருடத்திய சரக்கு சப்ளை - விலை (மத்திய) அவசரச் சட்டத்தின் செக்ஷன் 16 (1) படி இச்சட்டத்தால் கட்டுப்பட்ட சரக்குகள் இருக்கும் இடங்கள், கிடங்குகள், வண்டிகள், படகு, கப்பல், ஆகாயக் கப்பல் முதலியவைகளைச் சோதனை செய்யவும், எந்தச் சரக்கு சம்பந்தமாய் இச்சட்டம் மீறப்பட்டதென்று தோன்றுகிறதோ அச்சரக்குகளைக் கைப்பற்றி அவைகளை கோர்ட்டில் ஆஜர் படுத்தவும் சென்னை ராஜ்யத்திலுள்ள தாசில்தார் அல்லது உதவி தாசில்தார் அந்தஸ்துள்ள எல்லா உதவி தாலுக்கா சப்ளை ஆபீசர்களுக்கும், (Assistant Taluk Supply officers) உதவி தொழில் இன்ஜினியர்கள் ஜில்லா தொழில் ஆபீசர்கள் (Assistant Industrial Engineers and District Industrial officers) இவர்களுக்கும் மத்திய சர்க்காரால், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டத்தின் செக்ஷன் 13 (a) (b) படி சரக்குகளை விநியோகப்படுத்துவதுபற்றிய நிபந்தனைகள் போடவும் தடுக்கவும், குறிப்பிட்ட நபர்களுக்கு சரக்குகளை, குறிப்பிட்ட விலைக்கு விற்கும்படி உத்தரவிடவும் சென்னை ஜாயிண்டு டைரெக்டர் அப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் (Joint Director of Industries and Commerce) என்ற அதிகாரிக்கு, மத்திய சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் செக்ஷன் 19 (2) படி ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளரின் கணக்குகளை பரிசிலனை செய்ய அவைகளைத் தாகல் செய்யும்படிக்கும் அவர் வியாபார சம்பந்தமான உண்மை விஷயங்களைச் சொல்லும்படிக்கும் உத்தரவிட சென்னை சிவில் சப்ளை கமிஷனருக்கும், சிவில் சப்ளை டைரெக்டருக்கும் சிவில் சப்ளை டிப்டி கமிஷனருக்கும், ஜில்லா கலெக்டர்களுக்கும், மத்திய சர்க்காரால், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட அதிகாரிகள் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை; அவரவர் அதிகார எல்லைக்குள், மத்திய சர்க்கார் உத்தரவுகளுக்கிணங்க செலுத்தலாம்.

(22—9—50 விசேஷ இந்தியா கெஜட் — பாகம் II-செக்ஷன் 3, பக்கம் 841)

### கிரிமினல் வழக்கு தொடர அனுமதி கொடுக்கவேண்டிய அதிகாரி.

1950-ஆம் வருடத்திய சரக்கு சப்ளை விலை (மத்திய) அவசரச் சட்டத்தை மீறுபவர்மீது கிரிமினல் கோர்ட்டுகளில் வழக்கு தொடர அனுமதி கொடுக்க (Sanction Prosecution) சென்னை ஜாயிண்டு டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் (Joint Director of Iudustries and Commerce) என்ற அதிகாரிக்கு, மத்திய சர்க்காரால் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

(22-9-1950 விசேஷ இந்தியா கெஜட் — பாகம் II-செக்ஷன் 3, பக்கம் 841)

---

### ஜீனி - வெல்லச்சரக்கு - கட்டுப்பாடு உத்தரவு (1950)

---

(Sugar and Gur Control order 1950)

கரும்புச்சார் அல்லது பனை ரசத்தைக் காய்ச்சி உற்பத்தி செய்யப்படும் ஜீனி, பூரா, கற்கண்டு, வெல்லம், நாட்டுச் சர்க்கரை, பனைவெல்லம் போன்ற எல்லாச் சரக்குகளையும் கட்டுப்படுத்தி 7—10—1950-ல் மத்திய சர்க்காரால் இப்புது கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இது காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். இதன்படி அந்தந்த வட்டாரங்களுக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு,

கரும்பின் குறைந்தபட்ச விலையை, மத்திய சர்க்கார் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்வார்கள். இது கெஜட்டில் விளம்பரம் செய்யப்படும். இவ்விதம் நிர்ணயம் செய்யப்படும் விலைக்குக் குறைவாகக் கரும்பை, ஜீனி வெல்லம் முதலியவை உற்பத்தி செய்பவருக்கு விற்கவும், அவர்கள் அவ்விதம் வாங்கவும் கூடாது. மேலும் மத்திய சர்க்கார், கெஜட் விளம்பரத்தின் மூலம் கீழ்க்கண்ட உத்தரவுகள் செய்யலாம். அதாவது எந்த இடத்திலிருந்தும் கரும்பை வெளியே கொண்டு போகக்கூடாதென்று தடுக்கலாம், அல்லது நிபந்தனைகள் ஏற்படுத்தலாம்; ஜீனி, வெல்லம் முதலியவை உற்பத்தி செய்ய லைசென்சு வாங்கிக் கொண்டுதான் செய்ய வேண்டுமென்று உத்தரவிடலாம்; எந்த ராஜ்யத்திலிருந்தும் அல்லது ஒரு ராஜ்யத்தில் எந்த இடத்திலிருந்தும் ஜீனி அல்லது வெல்லச் சரக்குகளை வெளியே கொண்டு போகாமல் தடுக்கலாம்; அல்லது நிபந்தனைகள் ஏற்படுத்தலாம். ரயில், ரோடு, படகு முதலியவை மூலம் ஜீனி அல்லது வெல்லச் சரக்குகளை ஏற்றிச் செல்ல பர்மிட் வேண்டுமென்று உத்தரவிடலாம். (வாஸ்தவத்தில் பிரயாணம் செய்பவர்கள் கையுடன் ஐந்து சேருக்கு அதிகப்படாமல் ஜீனி எடுத்துச் செல்வதை மட்டில் இவ்விதம் போடப்படும் உத்தரவுகள் பாதிக்காது.) மேலும் ஜீனி, வெல்லச் சரக்கு இவைகளின் அதிகபட்ச விலையை, இடத்திற்கும், சரக்கு ரகத்திற்கும் ஏற்றவாறு மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும். அவ்விதம் விலை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு அந்த விலைக்கு மேல் ஒருவரும் அச்சரக்குகளை விற்கவும் வாங்கவும் கூடாது.

அந்தந்த ராஜ்யங்களுக்கு வேண்டிய அளவு ஜீனி அல்லது வெல்லச் சரக்குகளை மத்திய சர்க்கார் ஒதுக்கலாம்; எந்த உற்பத்தியாளருக்கும் வியாபாரிக்கும் அவரிடம் இருக்கும் சரக்கை யாருக்கு என்ன விலைக்கு விற்கவேண்டும் என்றும் உத்தரவிட மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. உற்பத்தியாளர்களையும் வியாபாரிகளையும் குறிப்பிட்ட கணக்குகள் வைத்துக் கொள்ளும் படிக்கும், ரிடர்ன் அனுப்பும்படிக்கும் மத்திய சர்க்கார் உத்தரவிடலாம். இவர்களிடம் இருக்கும் கணக்குகளைப் பரிசீலனை செய்யவும் உத்தரவிடலாம்; எந்த இடத்திலும் சோதனைகள் போடவும் உத்தரவிடலாம்.

இந்த உத்தரவின்படி மத்திய சர்க்காருக்குள்ள எந்த அதிகாரத்தையும் ஒரு ராஜ்ய சர்க்காரோ, அல்லது மத்திய சர்க்கார் அதிகாரியோ, ராஜ்ய சர்க்கார் அதிகாரியோ, செலுத்தும்படி அவர்களுக்கு அதிகாரமளிக்கவும் மத்திய சர்க்காருக்கு உரிமை உண்டு.

இந்த உத்தரவின் மூலம் 1949 ஆம் வருடத்திய ஜீனி ஸ்டாக் கட்டுப்பாடு உத்தரவும் (The Sugar stocks (Control) order 1949) இந்த உத்தரவுக்கு முரணாக இருக்கும் ராஜ்ய சர்க்கார் அல்லது அதிகாரிகளின் உத்தரவுகளும் ரத்து செய்யப்பட்டன. ஆனால் இந்த உத்தரவு அமுலுக்கு வந்த தேதியாகிய 7—10—1950 ல் அமுலில் உள்ள எந்த சர்க்கார் அல்லது அதிகாரியால் செய்யப்பட்ட உத்தரவுகளும் விலை நிர்ணயமும், லைசென்சு, பர்மிட் சம்பந்தமான உத்தரவுகளும், இந்த உத்தரவின் ஷரத்துக்களுக்கு விரோதமில்லாமல் இருந்தால் அவைகள் மட்டில் அமுலில் இருக்கும்; இந்த மத்திய சர்க்கார் கட்டுப்பாடு உத்தரவின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகவே அவை பாவிக்கப்படும்.

(17—10—1950- சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II - ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 154)

## ராஜ்ய சர்க்கார்களின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டது

ஜீனி அல்லது வெல்லச்சரக்கு சம்பந்தமாய் (சென்னை முதலிய) ராஜ்ய சர்க்கார்கள் இனி கட்டுப்பாடு உத்தரவுகள் பிறப்பிக்க முடியாது. அத்தியாவசியமான பொருள்களின் தாற்காலிக அதிகாரச் சட்டத்தின் (The Essential Supplies Temporary powers Act 1949) 4 ஆவது செக்ஷன்படி மேற்கண்ட சரக்குகள் சம்பந்தமாய் மத்திய சர்க்காரால் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் 14—10—1950 முதல் மத்திய சர்க்காரால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

(17—10—1950- சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II-பக்கம் 1398)

[குறிப்பு:—ஆனால் மேலே விவரிக்கப்பட்டிருக்கும் மத்திய சர்க்காரின் ஜீனி வெல்லச் சரக்கு கட்டுப்பாடு உத்தரவுப்படி, ஏற்கனவே ராஜ்ய சர்க்கார் அல்லது வேறு அதிகாரிகளால் செய்யப்பட்ட விலை நிர்ணயம், லைசென்சு பர்மிட் முதலியவை சம்பந்தமான உத்தரவுகள் எல்லாம் மத்திய சர்க்காரின் புதிய உத்தரவின் ஷரத்துகளுக்கு விரோதமில்லாமல் இருந்தால், அமுலில் இருக்கும் என்று இருக்கிறது கவனிக்கவும்]

## ஜீனி உற்பத்தியாளர்கள்:

வாகுவம்பான் முறைப்படி ஜீனி உற்பத்தி செய்பவர்கள் மத்திய சர்க்கார் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் அதிகாரியின் பர்மிட் இல்லாமல் ஜீனியை விற்கவும் வேறு வகையில் கொடுக்கவும் கூடாது.

(17—10—1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II-பக்கம் 1398)

[வெல்லம், வெல்லச்சரக்கின், மதராஸ் ராஜ்யத்தில் உச்ச விலை, இம்பீரியல் மணங்கு 1க்கு ரூ. 18 ஆக மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது]

## சென்னை (கரும்பு) வெல்லம்—போக்கு வரத்துக் கட்டுப்பாடு உத்தரவு—1950

சென்னை சர்க்காரால் கீழ்க்கண்ட கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது வெல்லம், நாட்டுச் சர்க்கரை, வெல்லச் சர்க்கரை முதலிய கரும்புச் சாற்றைக் காய்ச்சி, செய்யப்படும் எந்தச் சரக்குகளையும் திருச்சி ஜில்லாவிலிருந்தோ, கோயமுத்தூர் ஜில்லாவில் ஈரோடு, பல்லடம், தாராபுரம் தாலுக்காக்களிலிருந்தோ, சேலம் ஜில்லாவில் நாமக்கல் தாலுக்காவிலிருந்தோ, 'பர்மிட்' இல்லாமல் எவரும் வெளியே கொண்டு போகக் கூடாது. ரயில் மூலமாகவும் ரோடு மூலமாகவும் பர்மிட் இல்லாமல் கொண்டுபோகக் கூடாது. 'பர்மிட்' அதாவது அனுமதிச் சீட்டு, சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்களால் வழங்கப்படும். 'பர்மிட்' படி சரக்கு வெளியே கொண்டுபோகப் பட்டவுடன் அல்லது 'பர்மிட்'டில் கண்ட கெடு முடிந்ததும் பர்மிட்டை விவரம் கண்டு மேற்படி அதிகாரிக்குத் திருப்பி அனுப்பி விடவேண்டும். பனைமரங்களின் பதனியிலிருந்து காய்ச்சும் வெல்லத்திற்கு இந்த உத்தரவு கிடையாது.

(26-8-1950 சென்னை சர்க்கார் கெஜட்—விசேஷ வெளியீடு—பாகம் II-பக்கம் 1)

[குறிப்பு:—இந்த சென்னை உத்தரவு மத்திய சர்க்காரின் புதிய உத்தரவுக்குமுன்பு பிறப்பிக்கப் பட்டது.]

## உணவு தானியங்கள் சோதனை அதிகாரிகள்

1947 ஆம் வருடத்திய சென்னை உணவு தானியக்கட்டுப்பாடு உத்தரவை (The Madras Food Grains Control Order 1947) அனுசரித்து உணவு தானியங்கள் சேமித்து வைத்திருக்கும் இடங்கள் வண்டிகள் முதலிய இடங்களைப் பார்த்து, சோதனை செய்யவும், கையிருப்பு ஸ்டாக்கு, கணக்குகள் முதலியவைகள் எங்கிருந்தாலும் அவைகளைப் பார்வையிடவும், பரீட்சை செய்ய உணவு தானியத்தின் மாதிரி (Sample) எடுத்துக் கொள்ளவும் அவரவர் அதிகார எல்லைக்குள் கீழ்க்கண்ட அதிகாரிகளுக்கு, சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களாவார்:—

(1) எல்லாவித ரேஷனிங் ஆபீசர்களும்
(2) தாலூக்கா சப்ளை ஆபீசர்கள்
(3) ஜில்லா சப்ளை ஆபீசர்கள்

(4—7—1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் 2- பக்கம் 838)

## லெவி கொள்முதல் அதிகாரிகள்.

கோயமுத்தூர் ஜில்லாவில் அமுலில் இருக்கும் லெவி கொள்முதல் உத்தரவின்படி "உபரி தானியம்" எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய கீழ்க்கண்ட அதிகாரிகளுக்கு ஜில்லா கலெக்டரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தாசில்தார்கள், டிப்டி தாசில்தார்கள், தாலுகா சப்ளை ஆபீசர்கள், ரேஷனிங் ஆபீசர்கள் இவர்கள் அவரவர்கள் அதிகார எல்லைக்குள் இருக்கும் நிலச்சுவான் தார்கள், குத்தகைதார்கள் உள் குத்தகைதார்கள் வேறு எவ்வகையிலும் தானியம் அடைய உரிமை உள்ளவர்கள் இவர்கள் ஒவ்வொருவரும் 1359-1360 பசலிகளில் சாகுபடி செய்த நெல் முதலிய தானியங்களில் சர்க்

காருக்கு, விற்கவேண்டிய "உபரி தானியம்" எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய அதிகாரமுண்டு. இவ்விதம் "உபரி தானியம்" நிர்ணயம் செய்யப்படும்முன்பே அவசியமானல் குறிப்பிட்ட அளவு தானியத்தை உடனே சர்க்காருக்கு விற்கும்படி உத்தரவு செய்ய ஜில்லா சப்ளை ஆபீசருக்கும், அவரவர் அதிகார எல்லைக்குள் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள், தாசில்தார்கள், டிப்டி தாசில்தார்கள், தாலுகா சப்ளை ஆபீசர்கள், ரேஷனிங் ஆபீசர்கள் இவர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(22—8—1950 சென்னை சர்க்கார் கெஜட் - பாகம் II - பக்கம் 1106)

## பருத்தி கட்டுப்பாடு உத்தரவு (1950)

[Cotton Control order 1950 - மத்திய சர்க்கார் உத்தரவு - 13-9-1950-ல் அமுலுக்கு வந்து விட்டது. 13-9-1950 தேதியுள்ள இந்தியா கெஜட் விசேஷ வெளியீடு-பாகம் II-செக்ஷன் 3-பக்கம் 606 J-ல் பிரசுரம்.]

1949-ஆம் வருடத்திய பருத்தி கட்டுப்பாடு உத்தரவு ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். இந்த உத்தரவு இந்தியப் பருத்தியையும் அயல்நாட்டுப் பருத்தியையும் கொட்டை எடுத்த பருத்தி, கொட்டை எடுத்து அமுக்கப்பட்ட (பிரஸ்டு) பருத்தி யாவற்றையும் கட்டுப்படுத்தும்.

எவ்வித பருத்தி, பருத்திக்கொட்டை இவைகளின் உச்சவிலையையும் (maximum price) குறைந்தபட்ச விலையையும் (minimum price) ஜவுளி கமிஷனர் (Textile commissioner) நிர்ணயம் செய்வார். இவ்விதம் விலை நிர்ணயம் செய்த பிறகு ஒருவரும் உச்சவிலைக்கு மேலாவது குறைந்தபட்ச விலைக்குக் குறைவாகவாவது, பருத்தி, பருத்திக்கொட்டை ஒன்றையும் வாங்கவும், விற்கவும், வாங்குவதாக அல்லது விற்பதாக ஒப்புக்கொள்ளவும் கூடாது. ஜவுளி கமிஷனரால் பொதுவாக அனுமதிக்கப் பட்டாலொழிய, பருத்தி சம்பந்தமான ஒப்பந்தங்கள், தெஜி, மந்தி, தெஜி - மந்தி முதலிய சூதாட்டத்தைப் போன்ற ஒப்பந்தங்கள் முதலியவை ஒருவரும் செய்து கொள்ளக் கூடாது. அவ்விதம் செய்து கொள்வது செல்லாது.

ஒரு நூல் உற்பத்தியாளர் (மில் முதலியவை) குறிப்பிட்ட காலத்தில் அல்லது குறிப்பிட்ட இடங்களில் எவ்வளவு அளவுக்கு மேல் பருத்தி வாங்கவும் வைத்திருக்கவும் கூடாதென்று ஜவுளி கமிஷனர் நிர்ணயம் செய்யலாம். அதற்குமேல் வாங்குவதும் வைத்திருப்பதும் கூடாது. மேலும் அடுத்த ஆறு மாதத்திற்குத் தேவையான பருத்திக்கு மேற்கொண்டு ஒரு நூல் உற்பத்தியாளர் வைத்திருக்கும் பருத்தியை வேறு எவருக்கும் குறித்த விலைக்கு விற்றுவிடும்படி ஜவுளி கமிஷனர் உத்தரவு செய்யலாம். மேலும் பருத்தி வாங்கவும், விற்கவும், சேமித்துவைக்கவும், பருத்தியில் வியாபாரம் செய்யவும் பருத்தியின் மீது கடன் கொடுத்து அடகு பிடிக்கவும் லைசென்சு வாங்கிக் கொண்டு அதில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்கவேண்டும். (இந்த விதி நூல் உற்பத்தியாளர்களுக்கும் சொந்த உபயோகத்திற்காக 24 பேலுக்கு மேற்படாமல் பருத்தி வைத்திருப்பவர்களுக்கும் கிடையாது.) லைசென்சு வாங்க நமூனு 'பி' படி மனுப்போடவேண்டும். ஒவ்வொரு வருடமும் லைசென்சை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். லைசென்சு வாங்கவும் புதுப்பிக்கவும் கட்டணம் ரூ. 25. ஒரு நபர் ஒரு ராஜ்யத்திற்குள் ஒரு வருடத்தில் எவ்வளவு வகையான பருத்தி சம்பந்தமான லைசென்சு வாங்கிக் கொண்டாலும் ஒரே கட்டணம் ரூ. 25 போதும். லைசென்சு கெட்டுப் போனால் ரூ. 5/- செலுத்தி வேறு ட்யூப்ளிகேட் வாங்கிக் கொள்ளலாம். இந்த உத்தரவால் ஜவுளி கமிஷனருக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒருவரிடம் இருக்கும் பருத்தியின் எந்த அளவையும் குறிப்பிட்ட நபருக்கு விற்கவேண்டுமென்றும்; குறிப்பிட்ட நபர்களைத்தவிர வேறு ஒருவருக்கும் விற்கக்கூடாதென்றும்; மாதிரி கேட்கவும், பருத்தியை குறிப்பிட்ட காலத்திற்குள் கொட்டை எடுக்கும்படிக்கும், ஒரு இடத்திலிருந்து வேறு இடங்களுக்கு பருத்தியைக் கொண்டு போகக்கூடாதென்றும், குறிப்பிட்ட காலங்களில் ரயில்வே புக்கிங்கை நிறுத்தி

வைக்கும்படிக்கும், சோதனை முதலிய போடவும் உத்தரவிட ஜவுளிகமிஷனருக்கு அதிகாரமுண்டு. நூல் உற்பத்தியாளர்கள் மாதம் இருமுறை ரிட்டர்ன் அனுப்ப வேண்டியது பற்றியும் சில விதிகள் இருக்கின்றன.

## சென்னை கலப்பு எரு—தரம் விலைக் கட்டுப்பாடு உத்தரவு—1950.

(Madras Manure Mixtures Quality and Price control order, 1950) 1949 ஆம் வருடத்திய சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவில் (Madras Manure Dealers' Licensing Order 1949) கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து சென்னை விவசாய டைரக்டரால் இக் கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இது சென்னை மாகாணம் முழுவதிலும் அமுலில் இருக்கும். 10-10-1950 தேதியில் அமுலுக்கு வந்தது. இனி கலப்பு எரு (Manure Mixtures) தயார் செய்பவர்களும் வியாபாரம் செய்பவர்களும் சென்னை சர்க்காரின் அனுமதி பெற்ற பிறகு தான் கலப்பு எரு தயார் செய்யலாம்; வியாபாரம் செய்யலாம். கலப்பு எரு தயார் செய்யவும் அதில் வியாபாரம் செய்யவும் சென்னை விவசாய டைரக்டருக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். அவர் மூலம் எரு ஆலோசனைக் கமிட்டி (Fertiliser Advisory Committee) யின் சிபார்சின் பேரில் சென்னை சர்க்கார் எரு உற்பத்தி, வியாபாரம், இவைகளில் ஏற்கனவே அனுபவமுள்ளவர்களுக்கு மட்டில் தான் (Firms of standing dealing in manure) அனுமதி கொடுப்பார்கள். மனுவில் காணவேண்டிய விஷயங்கள் இக்கண்ட்ரோல் உத்தரவில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. கலப்பு எரு தயார் செய்யவும் வியாபாரம் செய்யவும் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டவர்கள் சரக்கின்மீது எவ்விதம் அடையாள சின்னங்கள் போடவேண்டும்; யார் யாருக்குத் தான் விற்பனை செய்யலாம்; என்ன விலைக்குத்தான் விற்கலாம் என்பதைப் பற்றியும் இன்னும் சில விஷயங்களைப் பற்றியும் விவரமான விதிகளும் இருக்கின்றன.

(10-10-1950 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II-ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 139)

## வனஸ்பதி

வனஸ்பதியுடன் நெய்போல் தோற்றமளிக்கக் கூடிய கலரையும் நெய்போன்ற வாசனையையும் கலக்கக் கூடாதென்றும் தேக ஆரோக்கியத்திற்கு கெடுதி உண்டாக்கும் கலர் வாசனை ஒன்றும் கலக்கக் கூடாதென்றும் இன்னும் சில நிபந்தனைகள் ஏற்படுத்தி மத்திய சர்க்காரால் 29-7-1950 ஏற்படுத்தப்பட்ட விதி ("வக்கீல்" 1950 அக்டோபர் இதழ் பக்கம் 23 பார்க்கவும்) 1-11-1950 லிருந்து தான் அமுலுக்குக் கொண்டுவரப்படு மென்று மத்திய சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

(26-9-1950 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II-பக்கம் 1265)

## ஜவுளி

### சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்

மேற்படி கட்டுப்பாடு உத்தரவில் அடியில் கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு சில்லறை ஜவுளி வியாபாரி தன்னிடம் இருக்கும் ஜவுளியை, யாதொரு லாபமும் சேர்க்காமல், வேறு சில்லறை வியாபாரிக்கு விற்பனை செய்யலாம்—என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(29—8—1950 சென்னை—சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்— பாகம் II - பக்கம் 115)

## ஷாப் சட்டம்

சாயம் போடும் ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்கு:—சென்னை ராஜ்யத்திலுள்ள, சாயம் போடும் வேலையில் ஈடுபட்டிருக்கும் எல்லா ஸ்தாபனங்களும் இனி ஷாப் சட்டத்தின் இரண்டு விதிகள் மட்டில் கிடையாது:—அதாவது செக்ஷன் 7 (1) படி தினசரி எந்த நேரத்திற்கு முன் கடையைத் திறக்கக் கூடாது; எந்த நேரத்திற்குப் பின் திறந்து வைத்திருக்கக் கூடாதென்ற விதி; செக்ஷன் 11 (1) படி வாரத்தில் ஒரு நாள் கடைகள் மூடப்படவேண்டுமென்ற விதி—இவை இரண்டு மட்டில் கிடையாது.

PRINTED BY N. RAMARATNAM, M.A, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUPUVANAM, TIRUVADAMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B. L.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK



பிராஞ்சு : (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

**சந்தனாதித்தைலம் அரைக்கீரைவிதைத்தைலம்**
**கோகுல் கூந்தல் தைலம்**

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

*For Madras*
SURAJ AGENCIES
MADRAS

*For Coimbatore, Palghat & Nilgiris*
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

Regd. No. M. 5399


# "வக்கீல்"

(பொது மக்களுக்கான)

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாதம் ஒரு முறை)

எளிய தமிழில், புதிது புதிதாய் வரும் சட்டங்களையும், கண்ட்ரோல், ரேஷன், லைசென்ஸ், விலை திர்ணயம், வருமான வரி, விற்பனை வரி, ஷாப் சட்டம் போன்ற பல சட்ட விஷயங்களையும் சுலபமாயும் தெளிவாயும் அனைவரும் அவ்வப்பொழுது தெரிந்து கொள்ளலாம்.

விசேஷ பகுதிகள்: வழக்கும் - தீர்ப்பும்; கேள்வி - பதில்

பிரதி இங்கிலீஷ் மாத முதல் தேதி வெளியாகும்

"வக்கீல்" 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

வருட சந்தா ரூ. 3.

எல்லா சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்களிலும், பிரபல நியூஸ் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம். (தென் இந்தியா)